Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 63 | வெள்ளிக்கிழமை 28 ஜனவரி 2022 | தை 15 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

**கொரோனா**
நேற்று 942
மொத்தம் 6,07,104

**உயிரிழப்பு**
நேற்று 23
மொத்தம் 15,369

# ஐ.நாவை ஏமாற்றவே முயற்சிக்கிறது அரசு

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஜனவரி 28**

**இலங்கை அரசு சர்வதேசத்தையும், தமிழ் மக்களையும் ஏமாற்றும் கைங்கரியத்தையே தொடர்ந்து செய்து வருகின்றது. தற்போது வடக்கில் நடத்தப்படும் நீதி அமைச்சின் நடமாடும் சேவை, எதிர்வரும் பெப்ரவரி மாத இறுதியில் நடக்கவுள்ள மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரை இலக்கு வைத்தே நடத்தப்படுகின்றது.** 15



## டிராக்டருடன் விபத்து: குடும்பஸ்தர் மரணம்

முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு, ஜன.28
முல்லைத்தீவு, மாந்தை கிழக்கில் நேற்று முன்தினம் இரவு நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார். 15

கோப்பாய்-
## ஆசிரிய கலாசாலையில் 8 மாணவருக்கு தொற்று!

யாழ்ப்பாணம், ஜன.28
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்கள் 8 பேருக்குக்கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள் 15

## ஜெய்சங்கருக்கு கொரோனா

புதுடில்லி, ஜன.28
இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. 15



## 13ஐ எதிர்த்து ஊர்தி பவனி

வவுனியா, ஜன.28
13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கோரும் செயற்பாடுகளுக்குக் கண்டனம் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் நடை 15

## 15,704 கோடி ரூபா 25 நாள்களில் அச்சடிப்பு

கொழும்பு, ஜன.28
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு ஆட்சிக்கு வந்தது முதல் இப்போதுவரை ஒரு லட்சத்து 49 ஆயிரத்து 905 கோடி ரூபாவை அச்சிட்டுள்ளது என்று தென் மற் 15

## திங்கள் வரையும் மின்வெட்டு இல்லை

கொழும்பு, ஜன.28
நாட்டில் எதிர்வரும் திங்கட்கிழமைவரை மின்வெட்டு நடைமுறைப்படுத்தப் படாது என்று பொதுப் பயன்பாடு 15



முச்சந்தி முரளி

"ஆடு Vகை குட்டி உறவெண்ட கதை மாதிரி 13ஐ வேண்டாமெண்டிட்டு தேர்தலில போட்டியிடுறதுக்கு ஒரு சாட்டு வேற சொல்லுகினம் Vாருங்கோ..."

## 13ஆவது திருத்தத்தில் எதுவுமில்லை அம்பலப்படுத்தவே தேர்தலில் போட்டி

மாகாண சபை தொடர்பில் முன்னணியின் வியாக்கியானம் இது

யாழ்ப்பாணம், ஜன.28
13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கும் எமக்கு விருப்பமில்லை. ஆனால் இந்தமுறை மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம். இவ்வாறு தமிழ்த் தேசிய 15

## மோடிக்கு கடிதம் அனுப்பிய தமிழ்க் கட்சிகள் ஊடக சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன.28
13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரியும், தமிழர் இனப்பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்தியும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பிய தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் இன்று ஊடக சந்திப்பொன்றை 15

## நீதிக்கான தேடலால் மைதானத்தில் மாணவர்

கிளிநொச்சி, ஜன.28
கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று நீதி அமைச்சின் நடமாடும் சேவை நடத்தப்பட்டதால், கற்றல் நடவடிக்கைக்காக வந்த மாணவர்கள் மைதானத்தில் காத்திருக்க நேர்ந்துள் 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆய்வு மாநாட்டு பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாடுகளின் வரிசையில், பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகால் நடத்தப்படும் 3 ஆவது சர்வதேச சித்த மருத்துவ ஆய்வு மாநாட்டுக்கான பயிற்சிப்பட்டறை, நேற்றுக் காலை கைதடியில் அமைந்துள்ள சித்த மருத்துவ அலகில் "புதிய இயல்பு நிலையில் எதிர்காலத்தைச் செழுமைப்படுத்தல்" என்ற தொனிப்பொருளின் கீழ் ஆரம்பமாகியது.

சித்த மருத்துவ அலகின் தலைவர், சித்த மருத்துவர் தயாளினி திலீபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி மருத்துவர் எஸ்.ராஜ்குமார், கைதடி சித்த போதனா மருத்துவமனைப் பொறுப்பதிகாரி சித்த மருத்துவர் ஐ.ஜெபநாமகணேசன், பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள், சித்த மருத்துவ அலகின் முகாமைத்துவ சபை உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், சர்வதேச சித்த மருத்துவ ஆய்வு மாநாடு நாளை மற்றும் நாளைமறுதினம் "சித்த மருத்துவத்தின் ஊடாக ஆரோக்கியமான வாழ்வுக்கான நோயெதிர்ப்பு சக்தியை மேம்படுத்தல்" என்ற தலைப்பில் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி1)

# சர்வதேச நியதிகளுக்கு அமைவாக பயங்கரவாத தடைச்சட்டம் திருத்தம்

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன. 28**

**43 வருடங்களின் பின்னர் சர்வதேச நியதிகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக பயங்கரவாதத் தடைச் சட்டம் தற்போது திருத்தப்பட்டு வருகின்றது என்று தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சரான ஜி.எல்.பீரிஸ்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெப்ரவரி இறுதி வாரத்தில் ஆரம்பமாகவுள்ள மனித உரிமைகள் சபையின் 49ஆவது கூட்டத் தொடருக்கு முன்னதாக மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக இலங்கையின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களைப் பகிர்வதே இன்றைய மாநாட்டின் நோக்கமாகும்.

43 வருடங்களின் பின்னர் சர்வதேச நியதிகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டு வரும் நோக்கத்துடன் அது திருத்தப்பட்டு வருகின்றது.

உத்தேசத் திருத்தங்கள் அடங்கிய சட்டவரைவை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

பல மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட நீண்ட கலந்துரையாடலின் தொடர்ச்சியாகவே பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தப்பட்டு வருகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் முக்கிய திருத்தங்களில் தடுப்புக் காவல் உத்தரவு, கட்டுப்பாட்டு உத்தரவு, நீதித்துறை மீளாய்வு உத்தரவுகளை வெளிப்படையாக அங்கீகரித்தல் தொடர்பான பிரிவுகளில் திருத்தங்களை மேற்கொள்ளுதல், நீண்ட கால தடுப்புக் காவலில் வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான வழக்குகளை விரைவாகத் தீர்த்தல், சுதந்திரத்துக்கு இடையூறு விளைவிக்கும் பிரிவுகளை இரத்துச் செய்தல், நீதிவான்கள் மற்றும் நீதித்துறை மருத்துவ அதிகாரிகளை அணுகுவதற்கான விதிகளை வெளிப்படுத்துதல் மற்றும் அறிமுகப்படுத்துதல், தடுப்புக் காவலில் உள்ள காலத்தில் துஷ்பிரயோகம் மற்றும் சித்திரவதைகளைத் தடுத்தல், குடும்பத்துடன் தொடர்புகொள்வதற்கான உரிமை, நீண்ட கால கைதிகளுக்கு பிணை வழங்குதல் மற்றும் வழக்குகளை நாளாந்தம் விசாரணை செய்தல் போன்ற பிரிவுகளிலான திருத்தங்கள் இதில் உள்ளடங்கும்.

நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 13ஆவது பிரிவின் கீழ் ஆலோசனைச் சபையொன்றும் அமைக்கப்பட்டுள்ளது - என்றார். (ம)

# 8 முதல் 11 வரை நாடாளுமன்று கூடும்

கொழும்பு, ஜன. 28

நாடாளுமன்றம் எதிர்வரும் 8ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை கூடும் என்று நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக தெரிவித்தார்.

விசேட பண்டங்கள் மற்றும் சேவை வரிகள் சட்டவரைவு இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதம் பெப்ரவரி 10ஆம் திகதியும், மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தொடர்பில் அனுதாபப் பிரேரணை விவாதம் பெப்ரவரி 11ஆம் திகதியும் இடம்பெறும். (ம)

# அமெரிக்கத் தூதரகத்தினர் அஸாத் சாலியுடன் சந்திப்பு

கொழும்பு,ஜன.28

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும், முன்னாள் ஆளுநருமான அஸாத் சாலி மற்றும் அமெரிக்கத் தூதரக உயர் அதிகாரிகளுக்கு இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது.

சந்திப்பில், தான் சட்டவிரோதமாகக் கைது செய்யப்பட்டமை மற்றும் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் மற்றும் பல புத்திஜீவிகள் கைது செய்யப்பட்டமை தொடர்பில், அ.மெரிக்கத்தூதரக அதிகாரிகளுக்கு விளக்கப்படுத்தினார். (ஒ-4,56)





# நடமாடும் சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், ஜன. 28

ஹெல்ப் ஏஜ் லங்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில், சுழிபுரம் ஸ்ரீ கணேச கிராம முன்னேற்ற சங்கத்தில் நடமாடும் கண் பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம் நேற்று முற்பகல் 9 மணி முதல் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சுழிபுரம்மேற்கு மற்றும் மத்திய கிராம அலுவலர் பிரிவுகளில் வசித்து வருகின்ற 55 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் பலர் கலந்துகொண்டு இலவச கண் பரிசோதனை செய்து பயனடைந்தனர்.

முகாமில் மருத்துவர்கள், ஹெல்ப் ஏஜ் லங்கா நிறுவனத்தின் ஊழியர்கள், அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். மேலும், எதிர்வரும் நாள்களில் ஊர்காவற்றுறையில் இவ்வாறான நடமாடும் சிகிச்சை முகாம் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி1,125)

# அபிவிருத்தி அலுவலருக்கு மட்டுமா பேருந்துச் சேவை?

## பயணிகள் விசனம்

யாழ்ப்பாணம்,ஜன.28

பருத்தித்துறையிலிருந்து முல்லைத்தீவுக்கு தினமும் அதிகாலை 5.45 மணிக்குப் புறப்படும் இ.போ.ச.பேருந்தில், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அதிகம் பயணிப்பதால், பொதுமக்கள் அந்தச் சேவையைப் பயன்படுத்த முடியாதுள்ளது.

காலையில் பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து கொக்கிளாய்வரை பயணிக்கும் பேருந்தை ஆசிரியர்கள் மற்றும் அரச அலுவலர்கள் அதிகம் பயன்படுத்தி வந்தனர். தற்போது அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட பலர் குறித்த பேருந்துச் சேவையை அதிகம் பயன்படுத்துகின்றனர்.

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பலருக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கிடைத்துள்ளதால், காலையில் புறப்படும் பேருந்து பருத்தித்துறையிலேயே நிறைகின்றது. இதனால் வரணி வடக்கு தொடக்கம் முல்லைத்தீவுக்குச் செல்லும் அரச அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். இதனால் கொடிகாமம் வரை வேறு வாகனங்களில் பயணிக்க வேண்டியுள்ளது. எனவே பருத்தித்துறையிலிருந்து முல்லைத்தீவு செல்லும் பயணிகளின் நலன்கருதி, காலையில் இரு பேருந்துச் சேவைகளை நடத்த வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4,9)

# கொரோனாத் தடுப்புத் திட்டம்: பங்காற்றியவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.28

இலங்கைமுழுவதும்கொரோனாத் தொற்றுக்கான தடுப்பு மருந்தேற்றல் திட்டத்தின் ஒரு வருடப் பூர்த்தியை முன்னிட்டு, கொரோனாத் தொற்றுக்கால சவால்களை எதிர் கொள்வதற்கு பெரும்பங்காற்றியவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை முற்பகல் 10.06 மணிக்கு இடம்பெறும்.

இந்த நிகழ்வு 'ஐக்கியமாக ஒரே மனதுடன் வலுவாக' என்ற தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மாகாண மற்றும் மாவட்ட சுகாதாரத் திணைக்களங்கள், சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயங்கள், பிரதேச, ஆதார, மாவட்ட பொது மற்றும் போதனா மருத்துவமனைகளில் இடம்பெறும்.

கொரோனாத் தொற்றுக்கான தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு வருட நிறைவின் அடைவுகளை அங்கீகரிக்கவும், பெருந்தொற்று ஏற்படாமல் இருக்க தொற்றுநோயியலாளர்களால் பரிந்துரை செய்யப்பட்டதன்படி தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், ஏனைய சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை மக்கள் தொடர்ந்து பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதற்காகவும் இந்த நிகழ்வானது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஒ-4,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் பரிசோதனையில் தனியார் நிறுவனம் மோசடி

*மாவட்ட மருத்துவரின் அறிக்கையால் அம்பலம்*

**கிளிநொச்சி, ஜன. 28**

**கிளிநொச்சியில் மாணவர்களுக்கு கண் பரிசோதனை மேற்கொண்ட தனியார் கண் மருத்துவ நிறுவனமொன்று, பெருமளவு மாணவர்கள் மூக்குக் கண்ணாடி பயன்படுத்தவேண்டும் என்று அறிவுறுத்திய நிலையில், மாவட்ட கண் மருத்துவரின் அறிக்கையில் அவர்களில் பலருக்கு கண்ணில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று அறிக்கை யிட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கிளிநொச்சியில் உள்ள ஓர் ஆரம்பப் பாடசாலையில் கடந்த மாதம் கண் பரிசோதனை மேற்கொண்ட தனியார் கண் மருத்துவ நிறுவனமொன்று 71 மாணவர்களுக்கு கண் பாதிப்பு உண்டு எனத் தெரிவித்து, அவர்களை யாழ்ப்பாணத்தில் உள்ள தங்களது மருத்துவ நிலையத்துக்கு மேலதிக பரிசோதனைக்காக வருமாறு அழைப்பு விடுத்திருந்தது.

பரிசோதனையில் 10 மாணவர்களைத் தவிர ஏனைய 61மாணவர்களுக்கும் கண்ணில் பாதிப்பு உண்டு எனவும் இவர்கள் மூக்குக் கண்ணாடி பயன்படுத்த வேண்டும் என்றும் குறித்த நிறுவனத்தால் அறிவுறுத்தப்பட்டது. இது தொடர்பில் சந்தேகமெழுப்பப்பட்ட நிலையில், உடனடி நடவடிக்கையில் இறங்கிய சுகாதாரப் பிரிவினர் அந்த மாணவர்களை கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் உள்ள கண் மருத்துவ நிபுணரிடம் பரிசோதிப்பதற்காக அழைத்துச் சென்றனர். இவ்வாறு 55 மாணவர்களுக்கு பரிசோதனை மேற்கொண்டதில் 38 மாணவர்களுக்கு கண்ணில் எவ்வித பிரச்சினையும் இல்லை எனவும் ஏனைய 17 மாணவர்களுக்கு கண்ணில் சிறுகுறைபாடுகள் உள்ளன என்றும் மாவட்ட கண் மருத்துவர் அறிக்கையிட்டுள்ளார்.

இதனால், குறித்த தனியார் கண் மருத்துவ நிறுவனமானது தனது வியாபார நடவடிக்கைகளுக்காக ஏழை மாணவர்களை இலக்குவைத்து, தவறான அறிக்கைகளையும் வழிநடத்தல்களையும் வழங்கியுள்ளதா என்று கேள்வியெழுப்பப்பட்டுள்ளது. (ம-214)

## அதிபர் சங்கக் கூட்டமைப்பு இன்று பணிப்புறக்கணிப்பு

கொழும்பு.ஜன.28

8 அதிபர்கள் சங்கங்களை உள்ளடக்கிய, அதிபர்கள் சங்கக் கூட்டமைப்பு இன்று ஒருநாள் அடையாள பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

சம்பளத் திருத்தச் சுற்றறிக்கையால் அதிபர்களுக்கு ஏற்பட்டுள்ள நிதி அநீதிக்கு உரிய தீர்வு கிடைக்காத காரணத்தால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தொழிற்சங்க உறுப்பினர்கள் இன்று சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடுவர். கடமைக்குச் சமுகமளிக்கமாட்டார்கள்.

இன்று உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால், பெப்ரவரி மாதமும் போராட்டம் நடத்தப்படும் என்று இலங்கை அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் பியசிறி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ஓ-4-இ)



## வெள்ளை அணில் கண்டுபிடிப்பு

கொழும்பு.ஜன.28

களுத்துறை வஸ்கடுவ சமுத்திராமய விகாரைக்கு அருகில், தனியார் ஒருவரது வீட்டில் அரியவகை வெள்ளை நிறத்தினாலான அணில் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை நிற உடலையும், சிவந்த கண்களையும் கொண்ட இந்த அணில் கூண்டில் அடைக்கப்பட்டுள்ளது. தேசிய மிருகக்காட்சிச் சாலைக்கும், களுத்துறை வடக்குப் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு அடி நீளமுள்ள இந்த அணிலை பிரதேச மக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றனர். (ஓ-4-இ)

## சிமெந்து மூடைகளுடன் மற்றொரு கப்பல்

கொழும்பு.ஜன.28

2 லட்சம் சிமெந்து மூடைகளைத் தாங்கிய மற்றுமொரு கப்பல் இன்று நாட்டை வந்தடையும் என்று சிமெந்து இறக்குமதியாளர்கள் மற்றும் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

6 லட்சம் சிமெந்து மூடைகளைத் தாங்கிய இரண்டு கப்பல்கள் கடந்தவாரம் நாட்டை வந்தடைந்தன. எனினும், சில பகுதிகளில் சிமெந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மத்திய அதிவேக நெடுஞ்சாலை, துறைமுக நகர் மற்றும் நகர வீடமைப்புத் திட்ட நிர்மாணம் உள்ளிட்ட ஏனைய தனியார் துறை கட்டுமானப் பணிகளுக்காக அதிக கேள்வி ஏற்பட்டுள்ளது என்று சிமெந்து இறக்குமதியாளர்கள் மற்றும் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-4-இ)

## அம்புலன்ஸ் சாரதியை இலக்குவைத்துச் சூடு

கொழும்பு, ஜன.28

பாணந்துறை ஆதார மருத்துவமனைக்கு அண்மையாக நோயாளர் காவு வண்டியொன்றின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நான்கு பேர் நோயாளர் காவு வண்டி மீது துப்பாக்கியால் சுட்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

எனினும் சம்பவத்தில் எவரும் காயங்களுக்கு உள்ளாகவில்லை. நோயாளர் காவு வண்டியின் சாரதியை இலக்கு வைத்தே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (வ-இ)




**வலியப்போய் வம்பை விலைக்கு வாங்கிறதெண்டு கேள்விப்பட்டிருப்பியள். அப்பிடித்தான் கண்டாவளையில எம்.ஓ.எச் டொக்டரை ஒருத்தர் வெருட்ட வெளிக்கிட்டு, இப்ப சிறைக்குள்ள போற நிலைமையில நிக்கிறார்.**

**கண்டாவளை எ.ஓ.எச்சுக்கு கிட்டடியிலதான் பொம்பிளை டொக்டர் ஒராள் பொறுப்பா வந்திருக்கிறா. அவாவுக்கு ஒரு போன் கோல் வந்திருக்கு. யாழ்ப்பாணம் மருத்துவபீட பீடாதிபதி சுரேந்திரகுமாரின்ர தம்பி எண்டு தன்னை அறிமுகம் செய்து கொண்டு ஆள் கதைக்க வெளிக்கிட்டிருக்கு. ஏதோ அந்த டொக்டரின்ர மேலதிகாரிமாதிரி கனக்க விசாரணை. டொக்டரும் விட்டுக்குடுக்காமல் "கண்டவன் நிண்டவனுக்கெல்லாம் நான் பதில் சொல்லத்தேவையில்லை. என்ர மேலதிகாரிமார் கேட்டால் அவைக்கு நான் விளக்கமளிப்பன்" எண்டு சொல்ல வெருட்டல் பேர்வழிக்கு கோபம் வந்திட்டு.**

**"என்னடி கதைக்கிறாய் வந்தனெண்டால் மூஞ்சையில இடிப்பன், வெளுப்பன், ராஸ்கல்" எண்டு ஆள் உக்கிரமா கதகளி ஆடிக்கொண்டே மிரட்டத்தொடங்கிட்டுது. ஆனால் டொக்டரும் லேசுப்பட்ட ஆள் இல்லை. அந்த வெருட்டல் பேர்வழி கதைச்ச முழுவதையும் ரெக்கோர்ட் பண்ணி, அதை பேஸ்புக்கில போட்டிட்டா. அதோட நிக்காமல் தருமபுரம் பொலிஸிலையும் கொம்பிளைண்ட் குடுத்திட்டா.**

**ஆனால் இதொண்டும் தெரியாத அந்த வெருட்டல் பேர்வழி, பிறகும் கோல் எடுத்து வெருட்டியிருக்கிறார். அவர் ஏற்கனவே வலிகாமம் மேற்கு பிரதேசசபையில எலெக்சன் கேட்டு, சனங்கள் ஆளுக்கு நாமம் போட்டு அனுப்பி விட்டதுகள். அதுக்கு பிறகு முந்தின ஆளுநர் ஒருத்தரின்ர சிபார்சில, இப்ப எம்.பியாகி இருக்கிற இன்னொரு முன்னாள் ஆளுநரோட ஆள் திரியிறார். அந்தத் தெனாவெட்டிலதான் இப்பிடி கண்டபடி வாய்வைச்சு, மாட்டி இருக்கிறார்.**

**இதுக்கு பிறகும் நேற்றுப்பின்னேரம் ஒரு ஜீப், கண்டாவளை டொக்டர் இருக்கிற குவார்ட்டஸ்க்கு முன்னால ரவுண்டடிச்சிருக்கு. பிறகு அதுக்க இருந்த ஒராள் கடும் கெட்ட வார்த்தையால பேசவும் தொடங்கியிருக்கு. அதையும் போன் பண்ணி டொக்டர் பொலிஸுக்கு சொல்லிட்டா. ஆனால் அங்க பொலிஸ் வாறதுக்குள்ள ஜீப் எஸ்கேப். வெருட்டினவரும் , ஜீப்பில வந்தவரும் ஒரே ஆளோ எண்டு பொலிஸ் விசாரிக்குதாம். எப்பிடியும் ஆளை இண்டைக்கோ நாளைக்கோ பிடிச்சு உள்ளுக்க போட்டிடுவினம்.**

**இதைத்தான் நுணலும் தன் வாயால கெடும் எண்டுறது போல....!**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபை அமர்வு பிற்போடல்

சாவகச்சேரி, ஜன. 28

சாவகச்சேரி ட்றிபேர்க் கல்லூரியில் நாளைமறுதினம் நடைபெறவிருந்த சாவகச்சேரி மத்தியஸ்தர் சபையின் அமர்வு, தவிர்க்க முடியாத காரணங்களால் நடைபெறமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி மாத அமர்வுகள் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும் என்று சபையின் தவிசாளர் வை.இராசரத்தினம் அறிவித்துள்ளார்.

(ஒ-ரி1-9)

# தென்மராட்சியில் மீண்டும் எகிறுகின்றது கொரோனா

தென்மராட்சிப் பிரதேசத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றது. இந்த மாதத்தில் நேற்று வரை 38 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மருத்துவமனை மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் போன்றவற்றில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனை நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும் காய்ச்சல் காரணமாக விடுதியில் தங்கி சிகிச்சை பெற அனுமதிக்கப்படுவோருக்கு, பி.சி. ஆர். பரிசோதனை. மேற்கொள்ளப்படுகின்றது. பரிசோதனையில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த 20 ஆம் திகதிக்குப் பின்னர் 20 க்கு மேற்பட்டோருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. எனவே இரு நாள்களுக்கு மேல் காய்ச்சல் அறிகுறி தென்படுவோர் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.

(ஒ-4-9)

# பேராதனை மாணவர்கள் 64பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜன.28

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 64 மாணவர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சிகிச்சைப்பெற்று வருகின்றனர் என பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். தொற்றுப் பரவலைத் தடுக்க மருத்துவ பீடத்தின் நுண்ணுயிர் துறை நிபுணர்களின் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது எனவும் அந்தக் குழு தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(வ-இ)

# பிரதமரின் பணம் மோசடி: இதுவரை முறையிடவில்லை



கொழும்பு, ஜன. 28

**பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலிருந்து பெருமளவிலான பணம் திருடப்பட்டதாகக்கூறப்படும் சம்பவம் தொடர்பில் இதுவரை முறைப்பாடு செய்யவில்லை என பிரதமரின் ஊடகச் செயலாளர் ரொஹான் வெலிவிட்ட தெரிவித்தார்.**

அரச வங்கியொன்றில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு சொந்தமான கணக்கிலிருந்து சுமார் 4 கோடி ரூபா பணம், பிரதமருக்கு மிக நெருக்கமான ஒருவர் ஊடாக கடந்த 6 வருடங்களில் அவ்வப்போது மோசடி செய்யப்பட்டுள்ளது என்றும் குறித்த மோசடியில் ஈடுபட்ட பிரதமரின் முன்னாள் செயலாளர் அலரி மாளிகையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார் என்றும் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம)



# திரிபோஷா தொழிற்சாலைக்கு வெளிநாடுகளிலிருந்து சோளம்

கொழும்பு, ஜன.28

ஜாஎல திரிபோஷா தொழிற்சாலையில் சோளத்துக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால், விநியோகஸ்தர்கள் ஊடாக வெளிநாடுகளில் இருந்து சோளத்தை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனம் ஜனாதிபதிக்கு அறிவித்ததை அடுத்து, அமெரிக்கா, பிரேஸில், இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து ஆயிரத்து 500 மெற்றிக்தொன் சோளம் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இலங்கையில் சோள உற்பத்திக்குத் தேவையான இரசாயனப் பசளை மற்றும் கிருமிநாசனிகள் கிடைக்காமையால், இந்தமுறை பெரும் போகத்தில் சோள அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது. எதிர்பார்த்த அறுவடை கிடைக்கவில்லை. இதனால் திரிபோஷா உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

(ஒ-4-இ)

# நாட்டை மீட்பதற்கான பிரேரணை பங்காளிக்கட்சிகளால் முன்வைப்பு

கொழும்பு, ஜன.28

தற்போது எதிர்கொள்ளும் நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்பதற்கான பிரேரணையை, அரசின் 10 பங்காளிக் கட்சிகள் இணைந்து முன்வைக்கத் தீர்மானித்துள்ளன.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையகத்தில், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணை ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கையளிக்கப்பட்ட பின்னர், மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்படும் என்று கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஒ-4-இ)

# மைத்திரி போட்டியிட்டால் பெரமுனவுக்குச் சாதகம்!

## *அமைச்சர் காமினி தெரிவிப்பு*

கொழும்பு, ஜன. 28

2024ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேட்பாளராக போட்டியிட வேண்டும் என பிரார்த்தித்துக் கொள்கிறோம். அவர் தனித்துப் போட்டியிடுவது பெரமுனவுக்குச் சாதகமாக அமையும் என மின்சாரத்துறை அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொதுஜன பெரமுன ஆட்சிக்கு வருவதற்கு சுதந்திரக் கட்சி முழுமையாக ஆதரவு வழங்கியது.

ஆட்சிக்கு வந்ததன் பின்னர் கறிவேப்பிலையை ஒதுக்குவதைப் போன்று பொதுஜன பெரமுன சுதந்திரக் கட்சியை ஒதுக்கிவிட்டது என சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணைந்ததால் சுதந்திரக் கட்சியின் 14 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்களா அல்லது சுதந்திரக் கட்சி பொதுஜன பெரமுனவுடன் ஒன்றிணைந்ததனால்தான் தேர்தலில் வெற்றியடைய முடிந்ததா என்பதை சுதந்திரக் கட்சியினர் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடவுள்ளதாக குறிப்பிட்டுள்ளதை வரவேற்கிறோம்.

பொதுஜன பெரமுன கட்சியுடன் கூட்டணியடிப்படையில் இணைந்துள்ள பங்காளிக்கட்சிகள் சிலவேளை தேர்தல் காலத்தில் தனித்து தீர்மானங்களை முன்னெடுக்கலாம்.

ஜனநாயக ரீதியில் அரசியல் தீர்மானங்களை முன்னெடுக்கும் உரிமை அனைத்துத் தரப்பினருக்கும் உண்டு -என்றார்.

(ம)

## புலிகள் மீளுருவாக்கம்

# சந்தேகநபர்களுடைய ஒப்பங்களை பரிசோதனை செய்யும்படி உத்தரவு

கொழும்பு, ஜன. 28

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீள உருவாக்கும் நோக்கில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 26 சந்தேக நபர்களின் கையெழுத்துக்களை பரிசோதனை செய்து மன்றுக்கு அறிக்கையளிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் சந்திம லியனகே, இதற்கான உத்தரவை அரச கையெழுத்து பரிசோதகருக்கு நேற்றுமுன்தினம் பிறப்பித்துள்ளார். இந்த சந்தேக நபர்கள், புலிகள் அமைப்பில் சேர்வதற்கான விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்துள்ளனர் என்றும், அவை தமது அதிகாரிகளால் மீட்கப்பட்ட பின்னர் கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26ஆம் திகதி சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்றும் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர்.

அதன்படி, இந்த சந்தேக நபர்கள் நிரப்பியதாக நம்பப்படும் குறித்த விண்ணப்பத்தில் உள்ள கையெழுத்தினையும் சந்தேக நபர்களின் கையெழுத்தினையும் ஒப்பீடு செய்ய வேண்டியுள்ளதாகவும் அதற்கு அனுமதியளிக்குமாறும் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் கோரினர். இதையடுத்தே இந்த உத்தரவு நீதிமன்றினால் வழங்கப்பட்டுள்ளது.


கைது செய்யப்பட்டுள்ள 26 இளைஞர்களும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் அவர்கள் சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கும் வரையில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுடைய பணத்தில் பெருந்தொகை மோசடி!

## பாலித ஆவேசம்



**கொழும்பு, ஜன. 28**

**'முட்டாள் பிசாசு' மூன்றரைக் கோடி ரூபாவுக்கு வேலையைக் கொடுத்திருந்தால், 'படித்த பிசாசுகள்' மக்கள் பணத்தில் எவ்வளவு கோடி ரூபாவைக் கொள்ளையடித்திருப்பார்கள் என்பதை ஊகிக்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்:- பிரதமர் மஹிந்த ராஜபக்ச முன்னர் ஜனாதிபதியாக பதவிவகித்தபோது பெற்ற சம்பளத்தை அரச வங்கியொன்றில் வைப்பிலிட்டிருந்த நிலையில், அதனை அவரது அலுவலக பிரதானியொருவர் மோசடி செய்துள்ளார். வேறு எந்த வேலையும் இல்லாத முன்னாள் ஜனாதிபதி இவ்வளவு பெரிய தொகையை வங்கியில் வைத்துவிட்டு எவ்வாறு வாழ்க்கையை நடத்தினார் என்பதைக் கண்டறிய வேண்டும் - என்றார். (ம)

# தனித்திருந்த மூதாட்டி அடித்துப் படுகொலை

## தங்கநகைகளும் அபகரிப்பு

அம்பாறை, ஜன.28

சாய்ந்தமருதில் வயோதிபப் பெண் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடமிருந்த தங்க நகைகளும் அபகரிக்கப்பட்டுள்ளன. அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது 15ஆம் பிரிவு, புதுப்பள்ளியைச் சேர்ந்த புஹாரி (வயது - 85) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

ஆறு ஆண் பிள்ளைகளின் தாயாரான அவர், பிள்ளைகள் திருமணம் முடித்து பல்வேறு பகுதிகளில் வாழ்ந்துவரும் நிலையில் தனிமையில் வசித்துள்ளார். அவரது நான்காவது மகன் வழமைபோன்று காலை உணவை வழங்க வீட்டுக்கு வந்தபோது தாயார் உயிரிழந்துள்ளதையறிந்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். குறித்த பெண் வீட்டில் செவ்வாய்க்கிழமை இரவு தூங்கிக்கொண்டிருந்தபோது வீட்டுக்குள் நுழைந்த கொலையாளி அவரைத் தாக்கிக் கொலைசெய்துவிட்டு அவரிடமிருந்த தங்க நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளார் என்று ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. பெண்ணின் தலைப்பகுதியில் அடிகாயம் ஒன்று காணப்படுகின்றது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளைச் சாய்ந்தமருதுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-22)

# மஹிந்தவினது பணம் திருட்டு நாமலுக்கு ஒன்றும் தெரியாதாம்

கொழும்பு, ஜன. 28

மஹிந்தவின் வங்கிக் கணக்கிலிருந்து பெருந்தொகைப் பணம் களவாடப்பட்டமை குறித்து தனக்கு எதுவும் தெரியாது என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் வங்கிக் கணக்கு ஒன்றிலிருந்து, மஹிந்தவின் பிரத்தியேக செயலாளர் ஒருவர் இரகசியமாக வங்கி அட்டையைப் பயன்படுத்தி கோடிக் கணக்கான பணத்தை மோசடிசெய்துள்ளார் என்று ஊடகங்களில் செய்தி வெளியாகியது. இதையடுத்து, குறித்த பிரத்தியேக செயலாளர் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் பணி நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



# ஹெரோய்னுடன் மூவர் கைது

கொழும்பு, ஜன.28

நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் ஹெரோய்னுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது. இதற்கமைவாக களுத்துறை, பாணந்துறை வடக்குப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அஜ்மீர் மாவத்தையில் ஒருவரும், கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெவொல்மடுவத்த பிரதேசத்தில் ஒருவரும் மற்றும் கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட படோவிட்ட பிரதேசத்தில் பெண்ணொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (வ-22)

# தற்கொலைக்கு அனுமதிகோரி சட்டத்தரணி அனுப்பிய கடிதம்

கொழும்பு.ஜன.28

கல்விக்காகப் பெற்ற கடனைச் செலுத்த முடியவில்லை. எனவே நான் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொள்வதற்கு நாடாளுமன்றம் அனுமதிக்கவேண்டும் என்று கோரி, சட்டத்தரணி அபே வர்தன கடிதம் அனுப்பியுள்ளார். ஜனாதிபதி, பிரதமர் உட்பட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

''காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் இருந்து எந்தவித காரணமுமின்றி என்னைப் பதவி நீக்கியுள்ளனர். மக்களின் வரிப்பணத்தில் கல்விகற்று கடனைச் செலுத்த முடியாமற் போனதற்காக நான் தூக்கிட்டுத் தற்கொலை செய்யவுள்ளேன். சிறு வயது முதல் உயர்தரம் வரையிலும், பின்னர் பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்றதன் மூலம் நான் இந்த நாட்டு மக்களிடம் கடன்பட்டுள்ளேன்'' என்று அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஒ-4-இ)

# காரைநகர் பிரதேசசபையின் உபதவிசாளராக விஜயராசா!

யாழ்ப்பாணம், ஜன. 28

காரைநகர் பிரதேசசபையின் உப தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஆண்டிஐயா விஜயராசா நேற்று முன்தினம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் இடம்பெற்ற உபதவிசாளர் தெரிவிலேயே ஆ.விஜயராசா உபதவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டார். இதில் சுயேச்சைக்குழு உறுப்பினர் 3 பேர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் ஒருவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் 2 பேர் என மொத்தம் 6 பேர் அவருக்கு ஆதரவாக வாக்களித்தனர். ஈ.பி.டி.பி. உறுப்பினர் 2 பேர், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் 2 பேர் என நால்வர் கூட்டத்துக்குச் சமுகமளிக்கவில்லை (ம-50)

# இணையத்தில் பரீட்சை அட்டை

கொழும்பு,ஜன.28

2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை அனுமதி அட்டையை, இதுவரை பெறாத பரீட்சார்த்திகள் திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளத்துக்குச் சென்று, அதனைப் பதிவிறக்கம் செய்துகொள்ளமுடியும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலைகள் மற்றும் தனியார் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் பரீட்சார்த்திகள் அனுமதி அட்டையை இதுவரை பெறவில்லை எனில் www.doenets.lk என்ற இணையத் தளத்தில், தேசிய அடையாள அட்டை எண் அல்லது குறியீட்டு எண்ணை உள்ளிட்டு அனுமதி அட்டையின் நகலைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-இ)



# மன்னார் சர்வமதக் குழு திருமலைக்கு பயணம்

மன்னார், ஜன.28

மன்னார் வாழ்வோதய சர்வ மதக் குழுவினர் திருகோணமலைக்கு நேற்றுமுன்தினம் பயணம் மேற்கொண்டுள்ளனர். பயணத்தின்போது திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்துடன் இணைந்து அங்குள்ள சர்வமதத் தலங்களைப் பார்வையிட்டதுடன் மதத் தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடினர். (வ-56)

# எல்லே பரீட்சைக்கு விண்ணப்பிக்குக!

யாழ்ப்பாணம், ஜன. 28

இலங்கை எல்லே சம்மேளனம், யாழ்ப்பாணம் மாவட்ட எல்லே சங்கத்தின் ஊடாக தமிழ் மொழி மூலமான தேசிய எல்லே நடுவர் பரீட்சையை பெப்ரவரி மாதம் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

இருபாலாரும் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணம் மாவட்ட எல்லே சங்க முகப்புத்தகத்தில் பதிவிறக்கம் செய்ய முடியும். அல்லது பிரதேச விளையாட்டு அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும். எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 10 . 1939



இறப்பு 25 . 01 . 2022

## திருமதி இந்திராதேவி கேசவரட்ணம்

**(முன்னாள் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை உத்தியோகத்தர் (Managers) Secretary**

வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராதேவி கேசவரட்ணம் கடந்த (25.01.2022) செவ்வாய்க்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காங்கேசு-இரத்தினபூபதி தம்பதிகளின் அன்பு மகளும், உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கனகரட்ணம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், கேசவரட்ணத்தின் அன்பு மனைவியும், டினேஷ் (கனடா) அவர்களின் அன்புத் தாயாரும், வசந்தி (கனடா) அவர்களின் அன்பு மாமியாரும், சிறி (கனடா), தயா, சுதா, சகுந்தலா (மலேசியா) ஆகியோரின் மைத்துனியும், புஸ்பதேவி (நுங்கி), கீர்த்திராணி (Australia), ஸ்ரீபாலச்சந்திரன், இந்திரக்குமாரன்(கனடா), ஜயந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவப்பிரசாதம் நித்தியானந்தன் (Australia), காலஞ்சென்ற தேவசேனா மற்றும் றஞ்சினி (கனடா), கனகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், றோகன், அருணன், நிறோஷன் (கனடா) றஜீவன், ஜெயசிறி (கனடா), யாழினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜான்ஸி (Australia), நிதர்சனி (London) ஆகியோரின் பெரிய தாயாரும், றாஜ்குமார் (Australia), யோகநாதன் (London) ஆகியோரின் மாமியாரும், றமிக்கா, ஆஷா, கிசோன் லிசோன், தார்மிகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (30.01.2022) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்பு: 077 959 2290**

(CS 1247) 1/6

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நம

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 01 . 1960



மறைவு 26 . 01 . 2022

## திருமதி தேவநாதன் ஞானஜோதி (பவா)

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியை பிறப்பிடமாகவும் தாவடி பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவநாதன் ஞானசோதி கடந்த (26.01.2022) புதன்கிழமை மாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை இரத்தினபூபதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - அன்னம்மா தம்பதியரின் மரு மகளும், தேவநாதன் அவர்களின் அன்பு மனைவியும், மோகனதாஸ், காலஞ்சென்ற சந்திரஜோதி மற்றும் ஜெகதாஸ் (பழம்), இன்பஜோதி, பகவான்தாஸ், கண்ணதாஸ், பிறேமதாஸ், சுபஜோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பிரேமச்சந்திரன் தேவ ராணி, சிறிரஞ்சன் தேவகி, காலஞ்சென்ற பாலச்சந்திரன், காலஞ்சென்ற வெற்றி வேலாயுதம் மற்றும் ராஜரஞ்சினி, செந்திமதி, லசிந்தா, சசிகலா, சுரேஸ் ஆகியோரின் மைத்துனியும், டாலினியின் அன்புச் சித்தியும், ஐதுர்சன், றெபேக்கா, கிரிசாந்தன், பிரியகீதன், சஸ்மி, ஜஷ்னன், காமினி, சிவானி, அட்சயன், பதுமிதா, கஜானி, லிவேக்கா, அபிஷா, சரலாஜினி, தஷ்வின், சதீஸ் ஆகியோரின் அன்பு அத்தையும், சுபவிஷாகனின் அன்புப் பெரியம்மாவும், மற்றும் ஹரிஸ்வா, ஆரபி, லயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2022) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: தேவநாதன் (கணவர்)**
**மற்றும் குடும்பத்தினர்.**
**தேவநாதன் - 077 180 4960**

**தாவடி**
**பிள்ளையார் கோவிலடி.**

(CS 1249) 1/6

# மரண அறிவித்தல்



## திரு.சிவகுரு சிவராசா

சாவகச்சேரி வடக்கு மடத்தடி வீதியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சிவராசா அவர்கள் கடந்த (26.01.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும், சறோஜாவின் அன்புக் கணவரும், தவமணி தேவி ஜெகசோதி (சுவிஸ்), செல்வராசா (பிரான்ஸ்), வாசுகி (சுவிஸ்) நடனதாஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அகிலன், வாணிஸ்ரீ அபிசனா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பிரதீபன் வின்ஸி தேவமலர் ஆகியோரின் மாமனாரும், குமாரசாமி, தனபால சிங்கம் (சுவிஸ்), கோகுலநாதன் (சுவிஸ்), தயாளினி (பிரான்ஸ்), ஞானகலா (லண்டன்), பராசக்தி பாக்கியலீலா, சந்திரசேகரம் ஆகி யோரின் மைத்துனரும், சதானா, நயானா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**பொ.குமாரசாமி (மைத்துனர்)**
**பெரியரசடி வீதி, சாவகச்சேரி.**

**தொடர்பு: 077 6185 235**

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 05 . 1962



மறைவு 17 . 01 . 2022

## செபரட்ணம் குகேந்திரராசா (ஜீவா)

பூவரசங்குளம் வவுனியாவைப் பிறப்பிடமாகவும், மலேசியாவை வசிப்பிட மாகவும் கொண்ட செபரட்ணம் குகேந்திரராசா (ஜீவா) கடந்த (17.01.2022) மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபரட்ணம் மற்றும் வள்ளியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், சகுந்தலா (ரஞ்சி) அவர்களின் அன்புக் கணவரும், லஜனன் (பிரான்ஸ்), லக்ஷன், அனுஷா (மாணவி, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நாகேந்திரராசா (ஓய்வு நிலை சாரதி, விவசாய திணைக் களம் - வவுனியா), விஜேந்திரராசா (தேவா- அவுஸ்ரேலியா), யனுஷா ஆகி யோரின் சகோதரரும், சந்திரகலா, ஜெயந்தி, காலஞ்சென்ற நாகம்மா, சந்திர சேகரம், நல்லம்மா (கனடா), சிவபாதம், காலஞ்சென்ற வேல்முருகு, கதிர்காம நாதன் (கனடா), சூரியகலா ஆகியோரது அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் (சிவன் கோவில் வீதி, மட்டுவில் மத்தி, சாவகச்சேரி) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 575 5792, 075 967 2125**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தவித்த முயலும் இலங்கையும் !

'தவித்த முயல் அடிப்பதுபோல்' என்னும் சொலவடை தமிழில் வழக்கில் உள்ளது. தற்போது சர்வதேசத்தைப் பொறுத்தமட்டில் இலங்கை ஒரு தவித்த முயல். போரால் பாதிக்கப்பட்ட, பொருண்மியத்தில் மிகவும் நலிவடைந்த, பெண் தலைமைத்துவக் குடும்பங்களை இலக்குவைத்து நுண்நிதி நிறுவனங்கள் 'தவித்த முயல் அடிப்பதைப் போன்று' தற்போது இலங்கையைத் தவித்த முயலாகப் பாவிக்க சர்வதேச சமூகம் எத்தனித்துக் கொண்டிருக்கின்றது. இதன் ஆகப்பிந்திய வரவுதான் ஓமான்.

டொலர் பற்றாக்குறை காரணமாக எரிபொருள் இறக்குமதி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் பெரும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளது. இதனால், 3.6 பில்லியன் டொலரை ஓமானிடம் இருந்து இலங்கை கடனாகக் கேட்டிருந்தது. இந்தக் கடனைப் பெற்றுக்கொள்வதற்கு கடந்த ஒக்ரோபர் மாதம் அமைச்சரவையும் அனுமதி வழங்கியது. ஆனால், தற்போது அந்தக் கடனை ஓமானிடம் இருந்து வாங்கப்போவதில்லை என்று அறிவித்துள்ளது அரசாங்கம். 'கடனுக்கான வட்டியில் சலுகை வழங்கவேண்டுமாயின் எண்ணெய் பற்றிய தேடுதல்களை மேற்கொள்ள இலங்கையில் ஓர் இடத்தை ஒதுக்கித் தரவேண்டும்' என்ற ஓமானின் கோரிக்கையை அடுத்தே இந்தக் கடன் திட்டத்தில் இருந்து பின்வாங்கியுள்ளது அரசாங்கம்.

பொருளாதாரத்தில் பின்னடைவைச் சந்தித்துள்ள நாடுகளுக்கு அள்ளியள்ளிக் கடன்கொடுத்து, அந்த நாடுகளை மீண்டெழ முடியாத அளவுக்கு வட்டித்தொகையால் அமிழ்த்தும் சீனாவின் கைங்கரியம் இலங்கையில் கைகூடி நெடுநாள்கள் ஆகிவிட்டன. இதைவிட இந்தியாவும் இதர கேந்திர முக்கியத்துவம் கருதிய நாடுகளும் பகுதியளவில் இந்த நாட்டின் வளங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. இந்தப் பட்டியல் இத்துடன் முடிந்துவிடப்போவதில்லை என்பதைத்தான் ஓமானின் கோரிக்கை கட்டியம் செய்கின்றது.


இலங்கை கேந்திர முக்கியத்துவம் மிக்கதொருநாடு. இதனால், இலங்கைதான் பெற்ற கடன்களுக்குக் கொடுக்கும் வட்டித்தொகையை விட, இந்த நாட்டின் சிறு நிலப்பரப்பிலாவது தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திவிடவேண்டும் என்பதைத்தான் ஒவ்வொரு நாடும் சிந்திக்கும். கேந்திர முக்கியத்துவம் கருதிய உலக வல்லாதிக்கப் போட்டிக்கு இந்த நகர்வுதான் காலத்தேவையானதும்கூட, அதைத்தான் ஓமானும் செய்ய எத்தனித்திருக்கின்றது.

ஆனால் ஓமானின் கோரிக்கையை இலங்கை நிராகரித்தமைக்குக் காரணம் தனது இறையாண்மைமீது இலங்கை அரசாங்கத்துக்கு இருக்கும் பற்று என்று எவரும் நினைத்தால் அதைவிட பரிகாசம் எதுவும் இருக்க முடியாது. என்ன செய்தேனும், நாட்டை முழுமையாக விற்றேனும் இப்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கே அரசாங்கம் முயன்றுகொண்டிருக்கின்றது. இந்த நிலையில், வட்டியில் சலுகைகளைச் செய்வதற்காக ஓமான் கேட்ட எண்ணெய் வளத் தேடுதலுக்கான இடத்தைக் கொடுப்பதென்பது இலங்கைக்கு ஒரு கௌரவப் பிரச்சினையாக இருக்கப்போவதில்லை. நாட்டின் துறைமுகங்கள் விமான நிலையங்கள் மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் என எல்லாவற்றையுமே தூக்கிக்கொடுத்த கோத்தாபய அரசாங்கத்துக்கு ஓமானின் கோரிக்கையை நிறைவேற்றுவதும் சிறு விடயமே. ஆனால், அதிலுள்ள நடைமுறைச் சிக்கல் என்னவெனில் ஏற்கனவே இந்தியாவிடமும் – அமெரிக்காவிடமும் – சீனாவிடமும் வாங்கிய கடன்களுக்காக இத்தகைய எண்ணெய் வள தேடுதல்களுக்கான இடங்களை கையளித்தாகிவிட்டது. அதே இடங்களை இன்னொரு முறை ஓமானுக்குக் கொடுத்தால் அது இலங்கைக்கு பெரும் சிக்கலை உண்டுபண்ணிவிடும். எப்படி இறக்குமதி செய்யாத உரத்துக்காக சீன நிறுவனத்துக்கு தண்டப்பணத்தை இலங்கை செலுத்தியதோ அதேபோன்று ஒரே இடத்தை இருவேறு நாடுகளுக்கு கொடுத்தமைக்காகவும் வாங்கிய கடனை விடவும் பல மடங்கு தொகையை செலுத்தவேண்டியிருக்கும். அதனால்தான் கொஞ்சம் புத்திசாலித்தனமாக யோசித்து ஓமானின் கோரிக்கையை இலங்கை நிராகரித்துள்ளது.

ஒன்றுமட்டும் உண்மை. இலங்கை இரையாகும் நிலையில் இருக்கின்றது என்பதை சர்வதேசம் பட்டவர்த்தனமாகப் புரிந்துகொண்டுள்ளது. இனி இலங்கை மேற்கொள்ளும் ஒவ்வொரு சர்வதேச கொடுக்கல் வாங்கல் நகர்வுகளிலும், இலங்கை பெற எத்தனிக்கும் ஒவ்வொரு கடன் ஒப்பந்தங்களிலும் ஓமானின் இதே எண்ணவோட்டம் [illegible] நாடுகளில் இருந்தும் வெளிப்படும். நலிந்தவை [illegible] இலகு; தவித்த முயல்கள் போராடும் குணமற்றவை.

### நாளொரு நல்வார்த்தை

"மெதுவாகப் பேசு. அது உன் ரகசியங்களைப் பாதுகாக்கும். நல்ல எண்ணத்தோடு இரு. அது உன் நடத்தையைப் பாதுகாக்கும்" – வள்ளலார்.



# அமைச்சர்கள் ஆடம்பரம் அல்லாடும் பொதுமக்கள்

*சஜித் சாட்டை*

**கொழும்பு, ஜன. 28**



**சொகுசு வாகனங்களில் பயணித்துக் கொண்டிருக்கும் அமைச்சர்கள் சாதாரண பொதுமக்களை துவிச்சக்கர வண்டியில் செல்லுமாறு கோருகின்றனர் என்று தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாவால் நாடு பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில், நாட்டின் காலாவதியான அரசியலை மாற்றியமைத்து எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாட்டுக்கு பெருமை சேர்த்துள்ளோம். நாடு முழுவதும் பால்மா, எண்ணெய் மற்றும் சிமெந்து போன்றவற்றைக் கொள்வனவு செய்ய வரிசைகள் உருவாகியுள்ளன. ஆனால் அமைச்சர்களோ சுகபோகத்தை அனுபவிக்கின்றனர். தாம் ஆடம்பர வாகனங்களில் பயணித்துக்கொண்டு பொதுமக்களை துவிச்சக்கர வண்டியில் பயணிக்குமாறு கோருகின்றனர் - என்றார். (ம)

*பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்*

## வெளியான வர்த்தமானிக்கு நீதிமன்றம் தடையுத்தரவு!

கொழும்பு, ஜன. 28

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட 'தீவிரவாத மற்றும் மதக் கருத்தியலை ஒழிப்பதற்கான விதிமுறைகள்' அடங்கிய வர்த்தமானி அறிவித்தலை நடைமுறைப்படுத்துவதற்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து உள்ளிட்ட மூன்று தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியது. முர்து பெர்னாண்டோ, யசந்த கோதாகொட மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது. (ம)

## மன்னார் மாவட்டத்திலும் கொரோனா அதிகரிப்பு

மன்னார், ஜன. 28

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளது என்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 16 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடத்தில் நேற்றுமுன்தினம் வரை 85 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் தற்போது வரை 3 ஆயிரத்து 268 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 36 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-56)

### நாளை

29.01.2022

சனிக்கிழமை

தை 16

சுபநேரம் : 03.36 - 05.06

ராகுகாலம் : 09.36 - 11.06

உலக தொழுநோயாளர் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவமயமாக்கலை ஒருபோதும் ஏற்கோம்

## சி.வி.விக்னேஸ்வரன் எதிர்ப்பு

**யாழ்ப்பாணம்,ஜன.28**

**இராணுவத்தினரும், தமிழ் மக்களும் ஒருபோதும் இணைந்து செயற்பட முடியாது. அரசின் அத்தகைய முயற்சியை எதிர்ப்போம் என்று வடக்கு மாகாணசபையின் முன்னாள் முதலமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

சங்கானை பிரதேச செயலகத்தில் சமூக மட்ட அமைப்புகளுக்கு உதவிகள் வழங்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழ் மக்களையும், இராணுவத்தினரையும் இணைந்து செயற்பட முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு நான் எதிரானவன்.

மக்களுடைய காணிகளை நாங்களே கைப்பற்றி, அவற்றை மக்களுக்குப் பயன்தரக்கூடியவாறு மாற்றியமைக்க வேண்டும். மாறாக இராணுவத்தினருக்கு மக்களது காணிகளை வழங்க முடியாது.

பிரதேச செயலர்கள் தமது பிரிவுக்குட்பட்ட காணிகளை ஏதோ ஒரு உபாயத்தின் மூலமாக, அவற்றின் உரிமையாளர்களை அடையாளங்கண்டு, குத்தகைக்கு எடுத்து, அவற்றை மக்களது தேவைக்காகப் பயன்படுத்தலாம். அதன் மூலமாக வருமானத்தைப் பெற்றுக் கொள்ள வழிசமைக்க வேண்டும். எதிர்காலம் மிக மோசமாக அமையக் கூடிய சூழ்நிலையை நாம் எமது கண்களூடாக தற்போது காண்கின்றோம். எனவே நாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதைச் சிந்தித்து, அந்த சிந்தனையின் அடிப்படையிலேயே முடிவுகளை எடுக்க வேண்டும் - என்றார். (ஒ-4-27)


# மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 02 . 1943



மறைவு 26 . 01 . 2022

## செல்வராசா சரஸ்வதியம்மா (அம்மளாச்சி)

விராங்கொடை தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் மானிப்பாய் அந்தோனியார் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட செல்வராசா சரஸ்வதியம்மா அவர்கள் கடந்த (26.01.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், சின்னப்பு செல்லத்துரை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வராசா அவர்களின் அன்பு மனைவியும், சிவபாக்கியம், ஞானேஸ்வரி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற விமலேஸ்வரி, அருள்தாஸ் (கெனடி), தர்மதாஸ், அருமைதாஸ், குகதாஸ், செல்வதாஸ், வினோதினி, ஜெகதாஸ் (ஜெகன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயசக்தி, வசந்தி, சிவரஞ்சினி, சுசி, சரணியா, பிரபாகரி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நிவேதா, ஆதித்தியன், சபிஷன், நிதுஷன், லதுஷன், புரட்சிகா, மதுஷன், சுசிதாஸ், இவான்சி, அஸ்வின்தாஸ், நிர்மியா, விகாஸ், செஞ்சிகா, கர்ணிகா, தக்ஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அமரர்களான பாலசிங்கம், வீரசிங்கம், துரைரட்ணம், சிவபூரணம், சொர்ணகாந்தி மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.01.2022) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
மகன் - கெனடி 076 648 7249
மகன் - ஜெகன் 077 971 6433

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 18251) 1-6




## இராணுவத்தினரால் வீடு கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜன.28

யாழ். அல்வாய் பகுதியிலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பம் ஒன்றுக்கு 'தலைக்கு நிழல்' திட்டத்தின் கீழ் 551 காலாட் படைப் பிரிவின் நெறிப்படுத்தலில் வீடு அமைக்கப்பட்டு இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வு யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத் யாபா ஆர்.டபிள்யு.பி ஆர்.எஸ்.பி. என்டியு தலைமையில் நடைபெற்றது.

அத்துடன் குறித்த வீட்டுக்குத் தேவையான தளபாடங்கள் மற்றும் உலருணவுப் பொதிகள் என்பவற்றை யாழ்ப்பாண பாதுகாப்பு படை கட்டளைத் தளபதி வழங்கி வைத்தார். (ச)

## ஆபத்தான சிலிண்டர்களை மீளப்பெறுவதற்குத் திட்டம்

கொழும்பு,ஜன.28

சமையல் எரிவாயுக் கசிவு ஏற்படும் என்று சந்தேகிக்கப்படும், சிலிண்டர்களை நுகர்வோரிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுகர்வோரிடமிருந்து மீளப்பெற்றுக் கொள்ளப்படும் சிலிண்டர்களிலுள்ள, எரிவாயுவின் அளவைக் கணிப்பிட்டு, புதிதாக சமையல் எரிவாயு சிலிண்டர்கள் கொள்வனவு செய்யப்படும்போது, அதற்கான கொடுப்பனவைக் கழித்து வழங்கப்படும்.

அவ்வாறு சிலிண்டர்களை விநியோகஸ்தர்கள் மற்றும் முகவர்களிடம் கையளிக்கும்போது, அவர்கள் அதனைப் பொறுப்பேற்க மறுத்தால்,நுகர்வோர் அதிகார சபையின் 1977 எனும் துரித தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது மாவட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்க முடியும் என்று நுகர்வோர் சேவை அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் லிட்ரோ மற்றும் லாப் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-4-இ)

## தேவாலயத்தில் கைக்குண்டு: மருத்துவர் இரகசிய வாக்குமூலம்

கொழும்பு,ஜன.28

பொரளை புனிதர்கள் தேவாலய வளாகத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்டுள்ள ஓய்வுபெற்ற மருத்துவரிடம் , இரகசிய வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் சம்பவம் தொடர்பில், நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்தனர்.

அதற்கமைவாக சந்தேக நபரான தொன் சார்லி தயார்ரத்ன ஹேரத்திடம் வாக்குமூலத்தைப் பெற கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் நீதிமன்றிடம் அனுமதி கோரினர். அதனையடுத்து கொழும்பு மேலதிக நீதிவான் ரஜீந்ரா ஜயசூரிய முன்னிலையில், மருத்துவரிடம் இரகசிய வாக்குமூலம் பெறப்பட்டது.

இதற்கு முன்னர் இந்த விவகாரத்தில் 13 வயதான சிறுவன் ஒருவனும், எம்பிலிபிட்டியவில் கைது செய்யப்பட்ட லியனகே தயாசேன என்ற சந்தேகநபரும் இரகசிய வாக்குமூலம் அளித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 7 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் விளக்கமறியலிலும், ஏனையோர் தடுப்புக் காவலிலும் உள்ளனர். (ஒ-4-இ)

## சடலங்கள் மீட்பு

கொழும்பு, ஜன.28

இரத்தினபுரி மற்றும் கம்பளை மாவட்டங்களிலிருந்து இரு சடலங்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது. இதற்கமைவாக இரத்தினபுரி, குருவிட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குளுகங்கையிலிருந்து 70 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலமும்,கம்பளைபொலிஸ் பிரிவுக்குட்பட்ட இல்வத்துர பிரதேசத்தில் மஹாவலி கங்கையிலிருந்து 50 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரின் சடலமும் மீட்கப்பட்டுள்ளன. இரு சடலங்களும் அடையாளம் காணப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (வ-22)

## மஹோற்சவமும் தெய்வீகப்பேருரையும்

யாழ்ப்பாணம், ஜன. 28

சங்கரத்தைகுளத்தடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்றுவரும் மஹோற்சவப் பெருவிழாவில், நாளை காலை [illegible] மணிக்கு சங்கரத்தை பத்திர காளி அம்பாள் ஆலயத்திலிருந்து நாகபூஷணி அம்பாள் ஆலயம் வரை பாற்குடபவனி இடம்பெறவுள்ளது. அத்துடன், முற்பகல் 11 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை காரை.எம்.பி.அருளானந்தனின் தெய்வீகப்பேருரையும் இடம்பெறும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பேச்சிலும் செயலிலும் கவனமாயிருந்தால் இனிய நாள். எதிர்பாராத பணவரவு உண்டு. நல்ல செய்திகள் தேடிவரும். மின்சார சாதனங்களை கையாளும்பொழுது கவனம் தேவை.

**இடபம்:** வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். அதிர்ஷ்ட நாள். வாகனப் பயணங்களில் நிதானம் அவசியம். உங்களின் புகழ் கூடும். ஆசை நிறைவேறும். லாபம் கூடும். குடும்பம் மகிழும்.

**மிதுனம்:** மூத்த சகோதரர், சகோதரியின் உதவி கிடைக்கும். நீங்கள் செய்யும் செயல்கள் சிறப்படைந்து நற்பலன் தரும். அலுவலக நண்பர்களால் ஏற்பட்ட கஷ்டம் நீங்கும்.

**கடகம்:** எதிர்பாராத சுபச்செலவு வரும். நண்பர்களால் நன்மை உண்டாகும். பணியில் கவனமாக இருக்கவும். பாவச்செயல்களைத் தவிர்க்கவும். பேச்சுக்கள் வெற்றியைத் தரும். பழிக்கு அஞ்சுங்கள்.

**சிம்மம்:** பதவி உயர்வு கிடைக்கும். பணிவாகச் செயற்பட்டு வெல்வீர்கள். எதிர்பாராத பண வரவு வந்து உங்களை திக்குமுக்காட வைக்கும். அதிர்ஷ்டமான நாள். வெளியூர் பயணங்கள் உண்டாகும்.

**கன்னி:** வெளிநாட்டுத் தொழில் தொடர்புகள் நல்ல லாபத்தை தரும். நிதிச் செயற்பாட்டிலும், பணம் கையாளும்போதும் கவனம் தேவை. உடலில் இருந்த அசதி நீங்கும். பெரியோரின் துணை உண்டு.

**துலாம்:** உங்களின் செல்வாக்கு கூடும். குடும்பத்தை கவனிப்பீர்கள். பணியாளர்கள் பேச்சில் கவனமாக இருக்கவும். சேமிப்பில் ஆர்வம் கூடும். வார்த்தைகளால் யாருக்கும் காயம் உண்டாக்க வேண்டாம்.

**விருச்சிகம்:** பணியாளர்கள் மன திடத்துடன் தடைகளை எதிர்கொள்வீர்கள். சுபச்செலவுகள் வரும். எதிர்பாராத பண வரவு உண்டு. பொறுமையுடன் காத்திருந்த விஷயம் இன்று நல்ல படியாக முடியும்.

**தனுசு:** புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். சோம்பல் வேண்டாம். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கவும். செயலில் கவனம் தேவை. அதிக உழைப்பால் பணி, தொழில் சிறப்படையும்.

**மகரம்:** முயற்சியை கூட்டுவதால் உங்களது செயல்கள் சிறப்படையும். குடும்ப நல்லுறவு நீடிக்கும். பெண்களுக்கு பாராட்டு கிடைக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கும்பம்:** தந்தைக்கும், குழந்தைகளுக்கும் மிகுந்த நன்மை ஏற்படும். கற்பனைக் குழப்பத்தை தவிர்க்கவும். குடும்பம் சிறப்படையும். பகை கொண்ட உறவினர்கள் உங்களால் இணைவர்.

**மீனம்:** எதிர்ப்பாலினத்தினரால் தொல்லைகள் ஏற்படக்கூடும். மற்றவர் பொருளைக் கையாள்கையில் கவனம் தேவை. வாழ்க்கைக்கு உதவக்கூடிய புதிய விஷயங்களை கற்பீர்கள்.

## ஒமிக்ரோன் தொற்றுப் பாதிப்பால்
# நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பு

**புதுடில்லி, ஜன.28**

**ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரித்துள்ளது என இந்திய மருத்துவ ஆராய்ச்சிக்கழகம் அண்மையில் நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களிடம் உருவாகிய நோய் எதிர்ப்புச் சக்தி ஒமிக்ரோனை மட்டுமின்றி டெல்டா வகை கொரோனாத் தொற்றை சிறப்பாகத் தடுக்கிறது என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுகிறது. இது தொடர்பில் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கையில், அண்மையில் 39 பேரை இந்த ஆய்வுக்கு உட்படுத்தினர். இதில் 25 பேர் கொரோனாவுக்கு எதிரான அஸ்ராஜெனகா தடுப்பூசியின் இரு டோஸ்களையும் செலுத்திக் கொண்டவர்கள். 8 பேர் பைசர் தடுப்பூசியின் இரு டோஸ்களையும் செலுத்திக் கொண்டவர்கள். 6 பேர் எந்தவித தடுப்பூசியும் செலுத்தாதவர்கள்.

இவர்கள் அனைவரும் ஒமிக்ரோன் வகை தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்த ஆய்வில் அவர்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி வகைகளான ஐஜிஜி, என்ஏபி ஆகியவை குறிப்பிட்ட அளவில் அதிகரித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## ரயில்வே தேர்வுக்கு எதிர்ப்பு; பீகாரில் வெடித்தது போராட்டம்

### ரயிலுக்கு தீவைத்த மாணவர்கள்

பீகாரில் ரயில்வே தொழில்நுட்பம் சாராத வேலைவாய்ப்பு தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு மீண்டும் தேர்வு நடத்துவதைக் கண்டித்து மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

பீகார் மாநிலம் கயா ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த ரயிலுக்கு மாணவர்கள் தீவைத்து எரித்துள்ளனர்.

இதில் ரயிலின் பல பெட்டிகள் தீக்கிரையாகிக் கருகின.

சில பகுதிகளில் இந்த போராட்டம் வன்முறையாக மாறியது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த ரயில்வே ஆள்தேர்வு வாரிய அதிகாரிகள் மற்றும் ரயில்வே பணியாளர்கள் முயன்றபோது மாணவர்கள் கற்களை வீசியதாகக் கூறப்படுகிறது.

பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த மாணவர்களை கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் தடியடி நடத்தியும் பீகார் பொலிஸார் விரட்டியடித்துள்ளனர். (ச-இ)

## உயிரிழந்தது ஒஸி

நியூயோர்க், ஜன.28

உலகின் அதிக வயதான கொரில்லாவான ஒஸி உயிரிழந்துள்ளதாக விலங்கியல் பூங்கா நிர்வாகிகள் தெரிவித்தனர்.

அமெரிக்காவில் உள்ள அட்லாண்டா உயிரியல் பூங்காவில் வசித்து வந்த இந்த கொரில்லாக் குரங்கைப் பார்ப்பதற்காகவே ஏராளமான ரசிகர்கள் வருவது வழக்கம். ஐந்து தலைமுறைகளைக் கண்டுள்ள இந்த கொரில்லாக் குரங்கு உயிரிழந்துள்ளமை அங்கு வரும் பார்வையாளர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

மேலும் ஒஸியின் மரணத்துக்கான காரணம் இதுவரை தெரியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. கொரில்லாக் குரங்குகள் வழமையாக 40 ஆண்டுகள் வரை உயிர் வாழும் நிலையில் இந்தக் குரங்கு 60 ஆண்டுகள் வரை வாழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)







## கடுமையான பனிப்பொழிவு: ஜேசிபியில் வந்த மணமகன்

இமாச்சல பிரதேசத்தில் கடும் பனிப்பொழிவால் ஜேசிபி இயந்திரத்தில் மணமகனை திருமணத்துக்கு அழைத்துச் செல்லும் காணொலி சமூக வலைத்தளத்தில் வைரலாகியுள்ளது.

இமாச்சல பிரதேச மாநிலமான சிம்லாவில் கடந்த சில நாள்களாக கடுமையான பனிப்பொழிவு காணப்படுகிறது.

இந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. திருமணம் அன்று காலை மணமகன் ஊர்வலமாக ரத்வா கிராமத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். சில கிலோமீற்றர் சென்ற நிலையில் ஊர்வலம் கடும் பனிப்பொழிவால் தடைப்பட்டது.

இதனால் மணமகனின் தந்தை இரண்டு ஜேசிபி இயந்திரங்களை வரவைத்து ஒரு ஜேசிபியில் மணமகனும், மற்றொரு ஜேசிபியில் மணமகன் குடும்பத்தினரும் பயணம் செய்தனர்.

சுமார் 30 கி.மீற்றர் ஜேசிபியிலேயே பயணம் செய்தவர்கள் திருமணத்துக்கு குறித்த நேரத்தில் சென்றடைந்தனர்.

இந்தக் காணொலி தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. (ச-இ)

## மறைந்த தளபதி பிபின் ராவத்துக்கு பத்ம விபூஷண் விருது

புதுடில்லி, ஜன.27

மறைந்த இந்திய முப்படை தலைமை தளபதி பிபின் ராவத்துக்கு 2022ஆம் ஆண்டுக்கான பத்ம விபூஷண் விருதை இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது. 2022ஆம் ஆண்டுக்கான பத்ம விருதுகள் மொத்தம் 128 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. இந்தப் பட்டியலில் 4 பத்ம விபூஷண், 17 பத்மபூஷண் மற்றும் 107 பத்மஸ்ரீ விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், மறைந்த முப்படைத் தளபதி பிபின் ராவத்துக்கு பத்ம விபூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிகாட்டுவானிலிருந்து சுற்றுலாக் கப்பல் சேவை



யாழ்ப்பாணம், ஜன.28

**வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்குடன், நடமாடும் உல்லாச சுற்றுலாக் கப்பல் சேவை, குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

தனியார் முதலீட்டுடன், கொழும்பு துறைமுக நகரத்தில் இருந்து, இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்தின் அனுமதியுடன் இந்தக் கப்பல் நேற்று முன்தினம் குறிகாட்டுவான் இறங்குதுறையை வந்தடைந்துள்ளது.

சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள தீவுகளை இலகுவான முறையில் சுற்றிப்பார்த்து, தமது பொழுதைக் கழிப்பதற்காக உணவகம், தங்குமிடம், குளியலறை, ஓய்வுப் பிரதேசம்,விளையாட்டுத்திடல், சமையல் பகுதி உள்ளிட்ட வசதிகள் கப்பலில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கப்பலில் நான்கு அறைகள் தற்போது ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் மாதமளவில் துறைமுக நகரில் இருந்து 30 அறைகளைக் கொண்ட மற்றொரு கப்பல் சேவையும், எதிர்காலத்தில் 100 அறைகளைக் கொண்ட கப்பல் சேவையும் அறிமுகப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கப்பல் சேவை மூலம், தீவகத்திலிருந்து கொழும்பு துறைமுக நகருக்குச் சுற்றுலாப் பயணிகள் இலகுவான சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஒ-4,125)

## 73ஆவது இந்திய குடியரசுதினம்





இந்தியாவின் 73ஆவது குடியரசுதினக் கொண்டாட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்திலும் கொண்டாட்டம் நடைபெற்றது. துணைத்தூதரகத்தின் பதில் தூதுவர் ராம் மகேஷ் இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து இந்தியன் கோணரில் கல்விபயிலும் மாணவர்களின் இந்திய தேசப் பக்திப்பாடல்கள் இசைக்கும் நிகழ்வும் நடைபெற்றது.

***இது தொடர்பில் நேற்றைய உதயனில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தவறுதலான ஒளிப்படம் பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகின்றோம்.*** (ஆ-ர்)



## இந்திய இராணுவத்துக்கு யாழ்ப்பாணத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜன.28

இந்தியாவின் 73ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு இலங்கையில் உயிர்நீத்த இந்திய இராணுவத்தினருக்கு பலாலியில் அமைக்கப்பட்டுள்ள இந்திய போர் வீரர் நினைவுத் தூபியில் நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் இந்திய பதில் துணைத்தூதுவர் ராம் மஹேஷ், யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படைத் தலைமையக கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ செனரத் யாபா, சிரேஷ்ட அதிகாரி, இந்தியத் துணைத் தூதரக அலுவலகத்தின் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ச)

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஜன. 28

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் வி.சுப்பிரமணியத்தின் 26 ஆவது ஆண்டு நினைவுப்பேருரை. இன்று முற்பகல் 9.30 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் செல்வஸ்தான் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட சிரேஷ்ட பேராசிரியர் கு.மிகுந்தன் நினைவுப்பேருரையை ஆற்றுவார்.

(ஒ-ரி)

## 19 பொலிஸாருக்கு கொரோனாத் தொற்று

கண்டி-பன்வில பிரதேசத்தில் 19 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தொற்றுக்குள்ளானவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அந்தப் பகுதியில் கொரோனா பரவும் அபாயம் அதிகமாக உள்ளதால், இதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனச் சுகாதாரத்துறை அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

(வ-22)


## வேலையாட்கள் தேவை

மருதனார் மடத்தில் இயங்கும் புடைவை நிறுவனத்திற்கு தொழில் அனுபவமுள்ள அல்லது பழக விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

(CS 1246 A) 1-6

தொடர்பு: 076 816 1363, 077 841 7811

## வேலையாட்கள் தேவை

அச்சுவேலியில் அமைந்துள்ள சமையல் எண்ணெய் உற்பத்தி தொழிற்சாலைக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. அனுபவமுள்ள ஆய்வக வேதியியலாளர் - Lab Chemist
2. இயந்திர இயக்குனர் Machinery Operator
3. அனுபவமுள்ள Welders, Drivers
4. Labours

தொடர்புகளுக்கு :

vacancyjaffna24@gmail.com 077 355 3959


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சபாரட்ணம் ஜெயசீலன்

பிறப்பு 27.12.1960

இறப்பு 09.01.2021

திதி:28.01.2022

அன்பான அப்பாவே பண்பும் - பாசமும்
அறிவும் காட்டி எம்மை - உயர்த்தியவரே
என்றும் எம்முடன் இருந்து
தங்கள் பசுமையான நினைவுகளை மீட்கும்
எமக்கு தங்கள் ஆசிர்வாதம் என்றென்றும்
வேண்டி தங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்

இல.190/1, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்

என்றும் தங்கள் நினைவுகளுடன் வாழும்
மனைவி - ஸ்ரீதேவி
மகள் - சுரபி, மகன் - அஜந்தன்

## மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 09 . 1949

மறைவு 27 . 01 . 2022

### பரமநாதி பரமேஸ்வரி

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப் பிடமாகவும் கொண்ட பரமநாதி பரமேஸ்வரி நேற்று (27.01.2022) வியா ழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சேதுப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பையா சீதேவிப்பிள்ளையின் மருமகளும், பரமநாதியின் அன்பு மனைவியும், சசிகலா, குகராஜா, அருள்சாந்தினி, உருத்திராவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், விவேகானந்தன், விக்கினேஸ்வரன், கஜகரன், கார்த்திகா ஆகியோரின் அன்பு மாமியாரும், சரஸ்வதி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், சண்முலிங்கம் (லண்டன்), ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், துஷ்யந்தி, கஜவர்த்தனி, விஷால், தவந்திகா, ரதுர்ஷனா, பவிஸ்ணு, மயூசன், டிவ்யன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: கணவர் (077710 1887)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30 . 10 . 1947

மறைவு 11 . 02 . 2018

### திருமதி சறோஜா ஈஸ்வரதாசன்

திதி: 28.01.2022

நினைவுகள் தூங்குவதில்லை அம்மா
ஆண்டுகள் நான்கு சென்றாலும்
எங்கள் கண்முன்னே நிற்பது போல் ஒரு பிரமை
என்றும் உங்கள் நினைவுகள் நீங்காது.

பிரிவால் வாடும்:
அன்புக் கணவர்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


15/2, சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி.

(cs.42525) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொட்டித்துண்டுக்காக வருபவர்கள் அல்லர்

## ஜனாதிபதியின் அரசியல் அழைப்பை போட்டுத்தாக்கினார் விக்னேஸ்வரன்!



**ஜனாதிபதியின் கொள்[illegible] விளக்க உரை மீதான விவாதத்தில் கடந்த 21ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரையின் முழு வடிவம் இங்கே தரப்படுகின்றது.**

தமிழர் பற்றி ஜனாதிபதியிடம் இருந்து நல்லுறவு பற்றிய வாசகங்கள் பலவாறாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவரிடம் இருந்து எமக்குக் கிடைத்த ஒரேயொரு கோரிக்கை 'உங்கள் மக்களை மறந்து விடுங்கள்! வாருங்கள்! வந்து என்னுடன் சேர்ந்து அபிவிருத்தி வேலையில் ஈடுபடுங்கள்' என்பதே.

2022 ஆண்டுகளுக்கு முன்னர் சிலுவையில் மரித்த ஒருவர் தீர்க்கதரிசி வாசகம் ஒன்றை விட்டுச்சென்றார். 'மனிதனானவன் ரொட்டித் துண்டை மட்டும் நம்பி வாழ்வதில்லை' என்பதே அந்த வாசகம். நாங்கள் எங்கள் உறவுகளைப் புறக்கணித்து, எமக்கு வாக்களித்தவர்களைக் கைவிட்டு, சிங்கள ஏகாதிபத்தியத்திடம் சிக்கித் தவிக்கும் எம் மக்களை ஏங்க விட்டு, அரசாங்கத் திணைக்களங்களிடமும் அரச படைகளிடமும் தமது காணி பூமிகளைப் பறிகொடுத்தவர்களை அசட்டை செய்து தன்னுடன் சேர்ந்து எம் மக்களுக்கு ரொட்டி கொண்டு செல்ல அழைக்கின்றார் ஜனாதிபதி!

**கஞ்சிக்காக தம் உரிமைகளை தமிழர்கள் அடகு வைக்கார்கள்**

3 ஆயிரம் வருடங்களுக்கு மேலான கலாசாரத்தையும் நாகரிகத்தையும் கொண்ட வடக்கு-கிழக்கு தமிழர்களை ஒரு ரொட்டித் துண்டைக் கொடுத்து வாங்கி விடலாம் என்று நினைக்கின்றார். அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு, இருக்கும் சொற்ப அரசியல் உரிமைகளையும் பறிகொடுத்து, பயமுறுத்தல்களுக்கு ஆளாகி இருக்கும்போது அவர்களைப் பட்டினிகிடக்க வைத்து திக்குமுக்காடச் செய்தால் தமது உரிமைகளை ஒரு பானைக் கஞ்சிக்கு அடகு வைக்கக் கூடியவர்கள் எம் மக்கள் என்று நினைக்கின்றார் ஜனாதிபதி. அவரின் அரசியல் அனுபவமின்மை இதிலிருந்து புலப்படுகின்றது.

ஜனாதிபதியின் கொள்கை விளம்பலானது அவர் இதுகாறும் நடந்த எதற்கும் மனவருத்தப்படுவதாகக் காட்டவில்லை. வருங்காலமாவது நல்லிணக்கத்துடன் மலர வேண்டும் என்ற அபிலாஷையைக் கொண்டதாகவும் அமையவில்லை. தான் இது வரை செய்தவற்றை பெருமையுடன் எடுத்தியம்பியுள்ளார். ஆனால் அவைதான் நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு இன்று இட்டுச் சென்றுள்ளன. எமது நாட்டை ஆபத்து நேரத்தில் உதவிக் காத்தவர்களைக் கூட அவர் பெயர் குறிப்பிட்டு நன்றியறிதல்களைக் கூறவில்லை. படித்த பண்புடைய சிங்களவர்கள் உட்பட உலகத்தவர் யாவரும் இன்று இலங்கை இவ்வாறாக என்றுமில்லாத ஒரு வங்குரோத்து நிலையை அடைய தீர்க்கப்படாத இனப்பிரச்சினையே காரணம் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். நாட்டின் வருமானத்தில் கிட்டதட்ட ஐந்தில் ஒரு பங்கு பாதுகாப்புக்கும் அரச படைகளைத் திருப்திப்படுத்தவுமே பாவிக்கப்படுகின்றது. 30 வருடப் போரானது எமது பெரும்பான்மையினத் தலைவர்கள் இனப் பிரச்சினையைத் தீர்க்க முன்வராததாலேயே நிகழ்ந்தது. அப்படியிருந்தும் ஜனாதிபதி இந்த நாட்டில் ஓர் இனப்பிரச்சினை இருப்பதை ஏற்க மறுத்து தமிழர்களுக்கு இருப்பது பொருளாதாரப் பிரச்சினை ஒன்றே என்கின்றார்.

ஒரு நாட்டில் அரசியல் பிரச்சினை என்று ஒன்றிருந்தால் அதுபற்றி செய்ய வேண்டிய புத்திசாலித்தனமானதும் விஞ்ஞான ரீதியுமானதுமான செயற்பாடு என்னவென்றால் பிரச்சினை என்னவென்று முதலில் அடையாளம் காணவேண்டும். அதன்பின் அதனைக்கூர்ந்து ஆராய வேண்டும். எதற்காக அது உருவாகியது என்பதைக் கண்டறிந்து இறுதியாக அதற்கான தீர்வைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். எமது ஜனாதிபதி தற்போது அவர் முன் பூதாகரமாகத் தாண்டவமாடும் இனப்பிரச்சினையை ஏற்றுக் கொள்ள மறுத்து, இல்லாத இனப் பொருளாதாரப் பிரச்சினைக்கு விடைகாணப்பார்க்கின்றார்.

தொடர்ந்து வந்த அரசாங்கங்களின் பிழையான பொருளாதாரக் கொள்கைகளால் இந்த நாட்டின் சகல இன மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வடக்கு கிழக்கில் பெரும்பான்மையினராக வசிக்கும் தமிழ் பேசும் மக்கள்கூட நாட்டின் பெரும்பான்மை சிங்கள மக்களுடனும் மற்றைய வருடனும் பாதிப்புக்கு உள்ளாகி வருந்திக் கொண்டிருக்கின்றனர். எனினும் வடக்கு- கிழக்கு மக்கள் தங்கள் அரசியல் பிரச்சனையைத் தீர்க்கத் திடசங்கற்பம் பூண்டுள்ளனர். இதை ஜனாதிபதி ஏற்க மறுக்கின்றார். இது இந்த நாட்டின் எதிர்காலத்துக்கு உகந்ததாகாது.

**முள்ளிவாய்க்கால் ஆரம்பப் புள்ளியல்ல**

நாடு சுதந்திரம் பெற்ற நாள் முதல் இந்த நாட்டின் தமிழ்' பேசும் மக்கள் துயருற்றிருக்கின்றார்கள் என்பதில் சந்தேகம் ஏதும் இருக்க முடியாது. சுதந்திரத்துக்கு முன்பிருந்தே வடகிழக்குக் காணிகளை அபகரிப்பது என்பது தொடக்கம் பெற்றுவிட்டது. அடுத்து இந்த நாட்டின் செழுமைக்கு உழைத்த இந்த நாட்டின் தமிழ் பேசும் மக்களின் ஒரு பகுதியினர் வாக்குரிமை அற்றவர்களாக ஆக்கப்பட்டார்கள்.

1956ஆம் ஆண்டில் மிக அருகிய தொகை கொண்ட சிங்களவர் வாழ்ந்த பொதுவாகச் சிங்களம் பேசப்படாத இடங்களில் எல்லாம் சிங்களமொழி திணிக்கப்பட்டது. அப்போதைய அரசாங்கத்தின் பக்கச் சார்பான சட்டங்களுக்கு எதிராகத் தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கிய போது வடமாகாணம் இராணுவ மயமாக்கப்பட்டது.

தமிழ் மாணவ, மாணவியர் மேற்படிப்புக்கு செல்வதைத் தடுக்கும் விதத்தில் உயர் கல்விப் பரீட்சைகளில் சமன்படுத்தல் முறை கையாளப்பட்டது. அதுமட்டுமல்லாது காலத்துக்குக் காலம் குழந்தைகளை அநியாயமாகக் கொன்றும், பெண்களைக் கற்பழித்தும் மற்றவர்களைக் கொன்றுகுவித்தும் நடத்தப்பட்ட கொலைக் கலவரங்கள் ஏராளம். இதன் காரணத்தால் பாதிக்கப்பட்டோரின் குடும்பங்கள் நாட்டைவிட்டு வெளியேறி புகலிடங்களைத் தேடிக்கொண்டனர். இவ்வாறான செயல்கள் யாவும் தொடர்ந்து வந்த அரசாங்கங்களால் அரங்கேறியபோது அவ் அரசாங்கங்கள் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சம்பந்தமான சர்வதேச உடன்பாட்டின் ஏற்பாடுகளையும், பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாட்டின் ஏற்பாடுகளையும் மீறிவிட்டிருந்தன. முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இனப்படுகொலை அவற்றின் தொடர்ச்சியே!

**சிங்கள - பௌத்த பேராதிக்கம் இனியும் தொடரத்தான் போகிறது**

தற்போதும் இவ்வாறான சர்வதேச சட்ட ஏற்பாடுகளின் மீறல்கள் வடக்கு- கிழக்கில் நடந்தேறிய வண்ணமே இருக்கின்றன. உரிய காணியேற்பு நடைமுறைகளைப் பின்பற்றாமல் படையினர் உதவியுடன் அரச திணைக்களங்கள் தனியார் காணிகளைக் கையேற்றல், வடக்கு- கிழக்கு வளங்களை முகவர்கள் ஊடாகவும் கூலிகள் ஊடாகவும் சூறையாடுதல், தமது பாரம்பரிய வாழ்விடங்களில் இருந்து தமிழரை விரட்டிவிட்டு மாகாணங்களுக்கு வெளியில் இருந்து கொண்டுவந்து பிற மக்களைக் குடியேற்றுதல், எமது மீனவர்கள் தமது பாரம்பரிய இடங்களில் மீன்பிடிப்பதைத் தடுத்து அவர்களின் வாழ்வாதாரங்களை அழித்தல், வடமாகாணத்தில் மட்டும் 65ஆயிரம் ஏக்கர்களுக்கு மேற்பட்ட அரச காணிகளைக் கையேற்று அவற்றில் படையினர் தொடர்ந்து வசித்து வர இடமளித்தல் போன்ற யாவையுமே மேற் கூறிய சர்வதேச உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு முரணானவை. இவை இன்றும் வழக்கத்தில் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன.

இவையாவும் நடந்தேறுவதை ஏற்றுக் கொள்ளாமல் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய எங்களை அவருடன் சேர்ந்து பொருளாதார அபிவிருத்தியில் ஈடுபடுமாறு கோருவது, மேற்கூறிய சட்டவிரோதச் செயல்கள் இனியும் கட்டாயமாக வடக்கு - கிழக்கில் தொடரப் போகின்றன என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. அதுமட்டுமல்லாது கூடிய வேகத்துடனும் விசையுடனும் இவை தொடர இடமுண்டு.

இன்றைய எமது இந்த நிலையை இந்தியா உள்ளடங்கிய சர்வதேச நாடுகள் கவனத்துக்கு எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

எமது மக்களின் பொருளாதார ரீதியிலான பிரச்சினைகளை நாம் அறிவோம். கடந்தகால பிழையான பொருளாதாரக் கொள்கைகளின் நிமித்தம் தற்போது இந்த நாடு எங்கு சென்று கொண்டிருக்கின்றது என்பதையும் நாம் அறிவோம். நாங்கள் எம் மக்களை ஏற்கனவே தற்சார்பு நடவடிக்கைகளில் இறங்கி தமக்குத் தேவையானவற்றில் தன்னிறைவு அடைய உழைக்குமாறு அறை கூவல் விடுத்திருக்கின்றோம்.

எனினும் இந்த அரசாங்கம் எம் மக்கள் மீது உண்மையான கரிசனை கொண்டு அவர்களுக்குத் தேவையான பொருளாதார செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த முன்வந்தால் நாங்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து எமது மக்கள் நலன் சார்ந்து செயற்றிட்டங்களை செயற்படுத்த எம்மாலான உதவிகள் அனைத்தையும் செய்வோம். ஆனால் எமது மக்களின் அரசியல் ரீதியான எதிர்பார்ப்புக்களை புறக்கணித்து ஜனாதிபதியுடன் சேர்ந்து ஒட்டுறவாடி எம்மக்களின் முதுகில் குத்த நாம் முன் வருவோம் என்று ஜனாதிபதி எண்ணக்கூடாது. இந்த நாட்டின் இனங்களுக்கிடையே நல்லுறவை ஏற்படுத்த வேண்டிய கட்டாயத்தை உணராது ஜனாதிபதி நெடுங்காலத்துக்குத் தன் கண்ணை மூடிக்கொண்டு இருக்கமுடியாது.

இன நல்லிணக்கத்தை உருவாக்கி நாட்டில் சாந்தியும் சமாதானமும் உருவாக ஜனாதிபதியும் அவரின் அரசாங்கமும் உண்மையாக உழைக்க விரும்புகின்றார்கள் என்றால் முதலில் பின்வருவனவற்றை அவர்கள் செய்ய வேண்டும்.

1. தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் பல திணைக்களங்கள் தற்போது வடக்கு கிழக்கில் நடத்தி வருகின்ற இன கலாசார அழிப்பின் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களின் இனப் பரம்பலை மாற்றி புதிய வரலாற்றை பிறழ்வாக எழுத எத்தனிக்கும் செயற்பாடுகளை உடனே நிறுத்த வேண்டும்.
2. [illegible]யங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும்.
3. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சிறையில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்ய வேண்டும்.

உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஜனாதிபதிக்கு மனமிருந்தால் மேற்கண்ட மூன்று விடயங்களையும் உடனே செய்ய வேண்டும். அதன் பின்னர்தான் புதிய தொரு சமஷ்டி அரசமைப்பை எமது ஜனநாயக சோஷலிஸக் குடியரசுக்காக வரைய வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இராணுவத்தினரால் நெல்அறுவடை விழா

முல்லைத்தீவில் ஜனாதிபதியின் பசுமை விவசாய செய்கைத் திட்டத்தின் கீழ் இயற்கை உரத்தை பயன்படுத்தி இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட விவசாய நெற்செய்கையின் அறுவடை விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 59 ஆவது படைப்பிரிவின் தலைமையக முகாமில் 12 ஏக்கர் வயல் நிலத்தில் இராணுவத்தினரால் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

அறுவடை நிகழ்வு பாரம்பரிய முறைப்படியும் மத வழிபாடுகளுடனும் இடம்பெற்றது.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமல நாதன், மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் வணசிங்க மற்றும் படைப்பிரிவு அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ச-19)


# 1 ஆம் ஆண்டு ஆத்ம சாந்தி அழைப்பு



கடந்த 08.02.2021 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் கந்தையா தனபாலசிங்கம்

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (28.01.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**துரையையா அவனியூ,**
**பத்தமேனி,**
**அச்சுவேலி.**

(cs 41181 (2.6)

**குடும்பத்தினர்.**

# INVITATION FOR BIDS TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Renovation of Casualty Operation Theatre | 500.00 | 43,000.00 | 91 | 2.13 | C8 |
| 2. | Aluminium Partition Store Room for JICA OT First Floor, Aluminium & Timber Works at Cardiothoracic Ward | 500.00 | 41,000.00 | 91 | 2.03 | C8 |
| 3. | Repair of A&E Building Cylinder Room Wall,Renovation of X-Ray Department Toilets. | 500.00 | 9,000.00 | 91 | 0.45 | C9 |

02. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

03. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

04. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary,

05. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 31.01.2022 up to 15.02.2022 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

06. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 am on 16.02.2022, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director (Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**

**28.01.2022**

(CR 37439) (3/6)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




**திருமதி ஜெயதேவி ஸ்ரீஸ்கந்தராஜா**

(அதிபர், யா/ வேலணை கிழக்கு, மகாவித்தியாலயம்)

நாரந்தனை கிழக்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திருமதி ஜெயதேவி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் **24.01.2022 திங்கட் கிழமை ஊர்காவற்துறை நீதிமன்றில் நீதிவான் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்** செய்துகொண்டமையிட்டு அவரது பணி மென்மேலும் சிறக்க [illegible] வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்

வாழ்த்துகிறவர்:

**நாரந்தனை.** (cs 1234) (2.6) **உறவினர்கள்**

# வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள Decon கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமுள்ள கணிய அளவையியலாளர் (Q.S - Auto Cad தெரிந்தவர் விரும்பத்தக்கது) மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.O), வர்ணம் பூசுபவர் (Painter), சாரதி (Driver)

தொடர்புக்கு: 077 777 0969 Email: jenoshanark@gmail.com

## வாடகை அடிப்படையில் வாகனம் பெறுவதற்கான கேள்வி அறிவித்தல் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அலுவலகப் பயன்பாட்டிற்கு 01.01.2015க்கு பின்னர் பதிவு செய்யப்பட்ட வான் ரக வாகனம் ஒன்றினை வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு ஆர்வமுடைய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பில் மேலதிக விபரங்களை வலிகாமம் **தென்மேற்கு பிரதேச சபை யாழ்வீதி. மானிப்பாய்** எனும் முகவரியில் அமைந்துள்ள எமது தலைமை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசியூடாகவோ (021 225 6650) பெற்றுக் கொள்ள முடியும். மேலும் 28.01.2022ம் திகதி தொடக்கம் 10.02.2022ம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 09.00 தொடக்கம் பி.ப 2.30 வரை நிதிக்கிளையில் ரூபா.1000.00 (மீளளிக்கப்படாத தொகையினை). கேள்விப் பிணை ரூபா.10,000.00 (மீளப் பெறத்தக்க தொகையினை) செலுத்தி கேள்விப் பத்திரத்தினைப் பெற்று 11.02.2022ம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விதாரர் அல்லது வருகைதரும் பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்

**தலைவர்**
**பெறுகைக்குழு**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**
**யாழ் வீதி, மானிப்பாய்.**

**28.01.2022**

(CR 37440) (3/6)

# பதினாறாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 09 . 04 . 1940



சிவன் அடியில் 25 . 01 . 2006

## அமரர் விநாசித்தம்பி சோமசுந்தரம்

(கொட்டடிச் சந்தி முன்னாள் பிரபல மரக்காலை உரிமையாளரும் – ஸ்தாபகர், சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)

(திதி : அபரபக்க ஏகாதசி (28.01.2022)

ஆசையாய் எம்மைப் பெற்று வளர்த்து, சிறப்பாய்
அறிவும் பண்பும் புகட்டி வளமுடன் வாழ வைத்த எங்கள் அப்பாவே!
தெய்வத்துள் நீங்கள் நிறைந்து விட்டாலும்
வையத்துள் வாழும் நாங்கள் நித்தமும்
நினைத்தே வாழ்வோம் அப்பா!
தெய்வம் போல் துணையாய் நின்று
நாளெல்லாம் எங்களைக் காப்பீர்கள் அப்பா!
எங்கள் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்
நிமலன் திருவடியில் நீங்கள் சேர்ந்து வாழ வேண்டுகின்றோம்.

D.1/1, சென்றல் றோட்,
கொழும்பு - 12,
119, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(CS 42485) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிகுறியற்ற சிறுவர்களுக்கும் வீடுகளிலேயே சிகிச்சை

கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் இல்லாதவர்களை மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்வதைத் தவிர்த்து, வீடுகளிலேயே சிகிச்சை அளிக்க வேண்டும் என்று சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா ஆலோசனை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பாக சிறுவர்களுக்கு அறிகுறிகள் தென்படாவிடின், அவ்வாறானவர்களை, வீடகளிலேயே பராமரிக்க வேண்டும். 1390 என்ற துரித இலக்கத்துக்கு அழைத்து அவர்களுக்குத் தேவையான சிகிச்சை தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும். காய்ச்சல் அறிகுறி இல்லாத, தாய்ப்பால் குடிக்கும், உணவு உட்கொள்ளும் சிறுவர்களை மருத்துவமனைகளில் சேர்க்கத் தேவையில்லை. காய்ச்சல், மூச்சு உள்வாங்க சிரமம், வாந்தி போன்ற அறிகுறிகள் இருக்குமாக இருந்தால், அவர்களைக் கட்டாயம் மருத்துவமனைகளில் சேர்க்க வேண்டும். சீமாட்டி சிறுவர் மருத்துவமனையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி 51 சிறுவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் -என்றார். (ஒ-4-இ)

## மரண அறிவித்தல்



### வல்லிபுரம் தெய்வானை

நாவற்குழி கிழக்கு தச்சந்தோப்பை பிறப்பிடமாகவும் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் தெய்வானை நேற்று முன்தினம் (26.01.2022) புதன்கிழமை சுவிசில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சடாச்சரம், சற்குணம் ஆகியோரின் அன்பு தாயாரும், மார்க்கண்டு, கனகமணி, சிலோசனா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிசில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்கொள்ளப் படுகிறார்கள்.

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**
**பரமு மார்க்கண்டு (மருமகன்)**

(CS 1242) (3/6)

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் விஸ்வநாதன் பாலரூபன்

B.Sc (computer science) P.G.D.E
யாழ் - சென்பற்றிக்ஸ் கல்லூரி கணினி (I.C.T) ஆசிரியர்



கண்விழிநீர் காயுமுன்னர்
காலம் ஒன்றானதே அப்பா!
எண்ணி எண்ணி நானும் பிள்ளைகளும்
உன்னினிய உறவுகளும் உன்
நினைவாகவே இருக்கின்றோம்!
அறிவாயோ அப்பா!

பிறப்பு:31.03.1979 இறப்பு:07.02.2021

லவ்லேன்,
உடுவில், சுன்னாகம்.

குடும்பத்தினர்

(cs.42528) (2.7)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 18.12.2021 அன்று
சிவபதமடைந்த எங்கள் குடும்ப குல விளக்கு

### அமரர் அருந்தவராசா விதுசன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (29.01.2022) சனிக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கிரையில் நடைபெற்று, வீட்டுக்கிருத்திய கிரியைகள் 31.01.2022 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

பிறப்பு 05.03.1999 இறப்பு 18.12.2021

வல்லை வீதி,
தொண்டைமானாறு.

குடும்பத்தினர்
077 049 8015

## கண்ணீர்ப் பூக்கள்

எமது அருமை அக்காவின் அகவை இரண்டின்
நினைவாக கண்ணீர்ப்பூக்கள் தூவி அஞ்சலி செய்கின்றோம்

### செல்வி குகநேசமலர் பொன்னுத்துரை

(ஓய்வு நிலை உப அதிபர் - உரும்பிராய் இந்துக் கல்லூரி)

தோற்றம் 30 . 12 . 1943



மறைவு 20 . 01 . 2020

**திதி: தேய்பிறை ஏகாதசி**

எமதருமை சோதரியே அகவை இரண்டானால் என்ன
ஆயிரம் தான் ஆனால் என்ன ஆறுமோ எமது நெஞ்சம்
அக்காவே உம் நினைவில் விழிநீர் சொரிந்து
மனமுருகி துதிக்கின்றோம்.

தங்கமே உம தன்பால் தரணியில் எம்மை
வளர்த்தெடுத்து தகைமையுடையோராக்கியதை மறப்போமோ
எமதக்கா உத்தமியே குகநேச மலரே. உலகில்
நாம் வாழும் வரை உருகியே வணங்கிடுவோம்

மீண்டும் ஒரு தரம் மீழெழுந்து வந்தெம்மை
உம் அன்பெனும் அமுதத்தால் வளர்த்தெடுக்க வேண்டுகின்றோம்
தங்க மகள் உமைப்பிரிந்து தரணியில் நாம் வாடுகின்றோம்
எங்களை நீர்வாழவைக்க எழுந்தோடிவாரீரோ.

வேம்பன் வீதி,
உரும்பிராய்.

(cs 1237) (2.6)

உம் நினைவால் துயருறும் உமதருமை
சகோதரர்களும், சகோதரிகளும்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 09 . 1943



இறப்பு 27 . 01 . 2022

### திருமதி இராசமணி குமாரசாமி

கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற குமாரசாமி (குமாரு) அவர்களின் அன்பு மனைவி இராசமணி நேற்று (27.01.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பையா - தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்கான துரைராசா, சிவசம்பு, சிவஞானம் மற்றும் செல்வராணி, சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரி (எழுதுவினைஞர் - சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்), புவனேஸ்வரி, இராசகுமார், சிவகுமார் ஆகியோரின் அன்புத் தயாயாரும், கீர்த்திநாதன், குணநாயகம், மைதிலி, வினோதினி ஆகியோரின் அன்பு மாமியாரும், அச்சுதன், அனுசன், காலஞ்சென்ற சஞ்சிகா, ஜங்கரன், அகிலன், அனுசியா,தரண்யா, நேருஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2022) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.
077 669 1290

(cs 1213) (2.6)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

பரமேஸ்வரா கல்லூரி வீதியிலுள்ள மேல் மாடி வீடு வாடகைக்கு விடப்படும்.
3 Room, Bathroom, Hall, Kitchen
மேலதிக தகவலுக்கு.
தொடர்பு: 077 333 0724

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி யசோ சந்திரபாலன்
அவர்களின் அன்புத் தந்தை
**நல்லதம்பி தங்கராசா**
அவர்கள் கடந்த (20.01.2022) வியாழக்கிழமை காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(cs.42526) (2.6)

பாடசாலை சமூகம்
யா/ ஊர்காவற்றுறை றோ.க.தமிழ் ஆண்கள் பாடசாலை

## ஏல விற்பனை

**எமது பண்ணையில்**
01. 72 கிழமைகளுக்கு மேற்பட்ட கிட்டதட்ட 200க்கும் கூடிய கோழிகளும் (கல்பேட்)
02. 05 மாதங்களுக்கு மேற்பட்ட கிட்டதட்ட 300க்கும் கூடிய சேவல்களும் ஏல விற்பனைக்குண்டு.

பண்ணை அத்தியட்சகர்,
பிராந்திய காலநடைப்பண்ணை,
பூந்தோட்டம் (College Road),
வவுனியா.

திகதி : 09.02.2022
தொடர்புகட்கு : 024 222 3533, 070 613 1351

(CR 37438) (3/6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்



இத்தாலியில் கடந்த (29.12.2021) புதன்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

## அமரர் பொன்னம்பலம் காமாட்சி

(7 ஆம் வட்டாரம் நயினாதீவு)

நாள்கள் முப்பத்தொன்று சென்றாலும் அகலவில்லை எங்கள் துயரம் தாயே!
மனம் உங்களைத் தேடுகிறது நினைவுகள் ரணங்களாய்க் கொல்கின்றன
குடும்பத்தின் ஒளிவிளக்காய் அனைவருடனும் கலகலப்பாகப்பேசி மகிழ்விக்கும்
உங்கள் சிரித்தமுகம் கண்களில் தொடர்ச்சியாகத் தோன்றிய வண்ணம் இருக்கின்றது
இவ்வளவு விரைவாக எங்களை விட்டுப்பிரிவீர்கள் என்று
கணப்பொழுதுகூட நாங்கள் நினைக்கவில்லை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிடாரி அம்பாள் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!**

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து நாம் துயருற்று இருந்த வேளையில் கோவிட் தொற்றின் ஆபத்தான சூழ்நிலையில் கூட இத்தாலி. இலங்கை. இங்கிலாந்தில் நேரில் வந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும். இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டவர்களுக்கும். தொலைபேசி. முகநூல். மின்னஞ்சல் மூலமாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும். அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும். மலர்க்கொத்து சாத்தியவர்களுக்கும். இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்துவரும் அன்பு நெஞ்சங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(cs 1240) (2.6)

**குடும்பத்தினர்**

# ஈர விழிகளில் 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## உயர்திரு. அமரர் E.S பேரம்பலம் கணேசலிங்கம்

உரிமையாளர் E.S. பேரம்பலம் & கம்பனி
கொழும்பு – யாழ்ப்பாணம்

அன்பின் உருவமாய்
அரவணைப்பின் சிகரமாய்
எம்மை வழி நடத்திய
எம் இதயத்தின் திருவிளக்கே...!
ஐந்து ஆண்டுகள் கடந்து
வருடங்கள் உருண்டாலும்
வலியின் வாசம் மட்டும்
விழிக்கருவில் வடுபோல்
விலகாமல் உள்ளதே
காலமெல்லாம் கண்ணீரில்
மிதக்கவிட்டு போனதேனோ..?
வாழ்ந்தவை யாவும் நினைவாகி
நீங்கள் மறைந்தது மட்டும்
கனவாகிப் போகாதா?
கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர்ப் பூக்கள் தூவி
உங்களையே எண்ணி வாடுகிறோம்
அணையாத தீபம் போல்
உங்கள் சுடர் என்றும்
எம்மை வாழ வைக்கும்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

உங்கள் ஆத்மா சாந்தி பெற
ஈழத்துச்சிதம்பர தில்லைக் கூத்தனை வேண்டுகின்றோம்

ACO 17699) (3/6)

நீங்கா நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்

தோற்றம்
18.06.1964

மறைவு
23.01.2017

கணேசபவனம்
வாரிவளவு, காரைநகர்.

இல. 50, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### ஐ.நாவை...

இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று யாழ். மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவினர்கள் சங்கம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு அவர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

எங்கள் உறவுகள் காணாமல் ஆக்கப் பட்டு எதிர்வரும் மே மாதத்துடன் 13 ஆண்டுகள் முடிகின்றன. நாங்கள் பல போராட்டங்களை, பேரணிகளை, உணவு தவிர்ப்புப் போராட்டங்களை நடத்திவிட்டோம்.

எத்தனையோ ஆணைக்குழுக்களின் விசாரணைகளுக்குச் சென்றிருக்கின்றோம். இதுவரை எந்தவிதமான பதிலும் எமக்குக் கிடைக்கவில்லை.

ஒவ்வொரு ஆணைக்குழுக்களும் எம்மைக் குழப்பும், அச்சுறுத்தும் வகையிலேயே செயற்பட்டன. நாங்கள் அவர்களுக்கு எத்தனையோ ஆதாரங்களை, கடிதங்களை வழங்கிவிட்டோம். ஆனால் அவர்கள் எமது விடயத்தில் ஒரு அடி கூட முன்னகரவில்லை.

இப்போதுள்ள ஆட்சியை நம்ப முடியாது. இவர்களின் ஆட்சியில்தான் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் நடந்தன. இவர்களிடம் இருந்து எவ்வாறு உண்மையைப் பெற்றுக் கொள்ள முடியும்?

நாங்கள் 3 ஜனாதிபதிகளைக் கண்டு விட்டோம். எதுவுமே நடக்கவில்லை. எதிர்வரும் பெப்ரவரி மாத இறுதியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் நடக்கவுள்ள நிலையில் அரசாங்கம் மீண்டும் சர்வதேசத்தையும், எம்மையும் ஏமாற்றும் செயற்பாட்டை அரசு ஆரம்பித்துள்ளது. வடக்கு மாகாணத்தில் நடத்தப்படும் நீதி அமைச்சின் நடமாடும் சேவை அந்த ஏமாற்று வேலையின் ஓர் அங்கமே.

யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள நடமாடும் சேவைக்கு, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் செல்ல வேண்டாம். இவர்களை நம்பி எமக்கு எந்தப் பயனும் இல்லை.

நாங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் முறையிட்டுள்ளோம். எமக்கு சர்வதேசம் பதில் வழங்க வேண்டும். எமது பிள்ளைகள், கணவர், சகோதரர்களைக் கண்டுபிடித்துத் தர வேண்டும்- என்றனர். (எ-20)

### டிராக்டருடன்...

நெல் அறுவடை செய்யும் இயந்திரத்தை ஏற்றியவாறு வீதியில் பயணித்த உழவியந்திரத்தின் (டிராக்டர்) மீது மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் மோதி விபத்துக்குள்ளாகினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த அநுராதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ரவீந்திர நிக்கசீல (வயது-48) என்பவரே உயிரிழந்துள்ளார். செல்வபுரம், பண்டியன்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த விமல் விக்னேஷ் (வயது-28) என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்தவர் மல்லாவி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காகக் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் உடல் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பாண்டியன்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

உழவியந்திரத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-19)

### ஆசிரிய...

எது.

ஆசிரிய மாணவர் ஒருவர் கடந்தவாரம் திடீரென சுகவீனமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதையடுத்து அறிகுறிகள் தென்பட்ட ஆசிரிய மாணவர்கள் தாமாக முன்வந்து மருத்துவமனையில் அன்டிஜென் பரிசோதனைக்குத் தங்களை உட்படுத்திக் கொண்டனர். அவர்களில் 8 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

### ஜெய்சங்கருக்கு...

தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றில் அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

கொரோனாப் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் என்னைத் தொடர்பு கொண்ட அனைவரும் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் என்று அவர் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

### 13ஆவது...

மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாங்கள் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது 13ஆவது திருத்தத்தைக் கோரும் தரப்புகளுக்கே பிரச்சினையாக இருக்கும். நாம் மாகாண சபையைக் கைப்பற்றி, 13 என்றவெற்றுக்கோஷத்தை அம்பலப்படுத்திவிடுவோம் என்று அவர்கள் அஞ்சுகின்றனர்.

முன்னாள் மன்னார் ஆயர் இராயப்பு யோசெப் தலைமையில் முன்னர் நடந்த ஒரு கூட்டத்தில், மாகாணசபைத் தேர்தலில் வென்று, அதிலுள்ள ஓட்டைகளை அம்பலப்படுத்தி அதைத் தாண்டி அரசியலைக் கொண்டு செல்ல முயல்வோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வாக்குறுதியளித்தனர்.

மாகாண சபைத் தேர்தலை மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற அழைப்பை விடுக்க வேண்டாம் -என்றார்கள். நாம் அதை நம்பினோம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்றுவரை அதைச் செய்யவில்லை.

எந்த அதிகாரமும் இல்லாத ஒன்றைத் தமிழ் மக்களிடம் திணித்து, வரப்போகின்ற அரசமைப்பில் 13ஆவது திருத்தம் உள்ளது என்று கூறி மக்களை ஆதரிக்க வைக்கும் முயற்சியை முறியடிக்க வே நாம் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம்.

நாங்கள் 13ஆவது திருத்தத்தை நிராகரிக்கின்றோம். கடந்த தேர்தலை எங்கள் கட்சி பகிஷ்கரித்தது. ஆனால் மக்களைப் பகிஷ்கரிக்க கோரவில்லை. மாகாண சபையின் அதிகாரமற்ற தன்மையை அம்பலப்படுத்தாமல் அதை ஏற்றுக் கொள்ளும் நிலைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சென்றுள்ளதால், மாகாண சபை முறைமையின் ஓட்டைகளை அம்பலப்படுத்தும் பொறுப்பை நாமே ஏற்க வேண்டும்- என்றார். (எ-இ)

### நீதிக்கான...

எது.

நீதி அமைச்சின் "நீதிக்கான தேடல்" நடமாடும் சேவை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது. பாடசாலை நாளான நேற்று இந்த நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால் மாணவர்களின் வகுப்பறைக் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் தடைப்பட்டதால் மாணவர்கள் விளையாட்டு மைதானத்தில் காக்க வைக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. (எ-6)

### 13 ஐ....

பெறவுள்ள போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில், ஊர்திப் பவனி ஒன்று வவுனியாவில் இருந்து முல்லைத்தீவு நோக்கி நேற்றுப் புறப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த ஊர்திப் பவனி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை வவுனியா நகர சபைக்கு முன்பாகவுள்ள பொங்குதமிழ் தூபியிலிருந்து ஊர்திப் பவனி ஆரம்பமானது.

ஊர்திப் பவனியின்போது பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இந்த ஊர்திப் பவனியுடன் இணைந்து பயணித்தனர். (எ-110)

### மோடிக்கு...

நடத்தவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

ஆறு தமிழ்க் கட்சிகள் இணைந்து இந்தக் கடிதத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியிருந்தன. அதே நேரம், இந்தக் கடிதம் அனுப்பப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள மற்றொரு கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதிகாரங்கள் இல்லாத 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கோருவது தமிழ் மக்களுக்குப் பாதகமாக அமையும் என்று தீவிர பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றது.

எதிர்வரும் 31ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் எதிர்ப்புப் பேரணி ஒன்றையும் ஏற்பாடு செய்துள்ளது.

இந்தப் பின்னணியிலேயே இந்தியப் பிரதமருக்குக் கடிதம் அனுப்பிய கட்சிகள் இன்று யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பொன்றை நடத்தவுள்ளன. (எ-இ)

### திங்கள்வரையும்...

கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்றுக் கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இந்தத் தகவலை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டது.

பொதுபயன்பாட்டு ஆணைக்குழு மற்றும் இலங்கை மின்சார சபையின் பிரதிநிதிகளுக்கிடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த அறிவிப்பு வெளியானது. சுமார் 2 மணித்தியாலங்கள் மின்சார நெருக்கடி தொடர்பில் இவர்கள் கலந்துரையாடினர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் பற்றாக்குறையால் எரிபொருள் இறக்குமதியில் நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளது. இலங்கை மின்சார சபைக்குத் தேவையான எரிபொருள் வழங்கல் தடைப்பட்டுள்ளதால் மின்வெட்டு நடைமுறைப்படுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

ஆயினும், எதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமைவரை மின்சார வழங்கலைச் சீராக மேற்கொள்ள முடியும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, இலங்கையில் ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாட்டுக்கான தற்காலிகத் தீர்வாக இந்தியா 500 மில்லியன் டொலரை இலங்கைக்கு கடனாக வழங்கத் தீர்மானித்துள்ளது. இந்தக் கடன் தொகை விரைவில் இலங்கைக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியாவிடம் இருந்து கிடைக்கும் கடனுதவி எரிபொருள் இறக்குமதிக்கே பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

### 15,704...

றும் மத்திய மாகாணங்களின் முன்னாள் ஆளுநர் ரஜித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

2022 ஆம் ஆண்டின் இதுவரையான 25 நாள்களில் மட்டும் 15 ஆயிரத்து 704 கோடி ரூபாவை அரசாங்கம் அச்சிட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் அரசாங்கம் 67 ஆயிரத்து 833 கோடி ரூபா அச்சிட்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி மட்டும் 66 ஆயிரத்து 500 இலட்சம் ரூபா அச்சிடப்பட்டுள்ளது.

அஜித் நிவாட் கப்ரால் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்ட பின்னர் மட்டும் 28 ஆயிரத்து 942 கோடி ரூபா அச்சிடப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி உருவாக்கப்பட்ட பின்னர் தற்போதைய அரசு ஆட்சிக்கு வரும்வரையில் 7 ஆயிரத்து 474 கோடி ரூபா மட்டுமே அச்சிடப்பட்டிருந்தது. இந்தத் தொகையின் 20 மடங்கு அதிகமான தொகை கடந்த 25 மாதங்களில் அச்சிடப்பட்டுள்ளது.

கட்டுப்பாடின்றிப் பணத்தை அச்சிடுவதால் பணவீக்கம் அதிகமாகவுள்ள நாடுகளுடன் இலங்கையும் இணைந்துள்ளது. மத்திய வங்கியின் மூத்த பொருளாதார நிபுணர்களின் ஆலோசனைகள் பெறப்படாது, திறைசேரியின் செயலாளரும், மத்திய வங்கியின் ஆளுநரும் சர்வாதிகாரிகள் போன்று தன்னிச்சையாகப் பணத்தை அச்சிடுகின்றனர் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை வளப்படுத்தும் ஐக்கிய மக்கள் சக்தி

## சஜித் நம்பிக்கை

கொழும்பு, ஜன.28

நாட்டின் அனைத்து வளங்களையும் விற்று, மக்களை இந்த அரசு துன்புறுத்துகின்றது. ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி இந்த நாட்டுக்கு பெறுமானம் சேர்க்கும் செயற்பாடுகளையே மேற்கொள்ளும்.

இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பொரலஸ்கமுவ மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கு முச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தி இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் நலனுக்காக, பாரம்பரிய எதிர்க்கட்சி என்ற வகிபாகத்தைப் புரட்டிப் போட்டுள்ளது.

மக்களுக்குச் செய்யக்கூடிய சேவைகளைச் செயலில் நிரூபிக்க வேண்டும்.

இதற்காக அதிகாரத்தைப் பெற கனவு காணும் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்.

அவ்வாறு செய்யாமல் பெருமை பேசுவதில் அர்த்தமில்லை.

கொரோனா பேரிடர் காரணமாக உலகம் முழுவதும் வறுமையின் அடிமட்டத்துக்குச் சென்று கொண்டிருக்கும் போதிலும், உலகின் 10 பெரும் பணக்காரர்களின் சொத்துக்கள் அதிகரித்துள்ளன.

இலங்கையிலும் இதே நிலைமைதான் உள்ளது. நாட்டில் உள்ள அரச சொத்துக்களை விற்பனை செய்வதே இப்போது நடப்பதாக இருந்தாலும், நாட்டுக்குப் பெறுமானம் சேர்ப்பதையே நாங்கள் செய்கின்றோம். -என்றார்.

(ஒ-4-இ)

**தேவை**

சிறிய குடும்பம் ஒன்றிற்கு யாழ். நகர், புறநகர் பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

**077 644 6514**

**முதலீட்டாளர்கள் தேவை**

வளர்ந்துவரும் நிறுவனம் (IT Related) ஒன்றின் சேவைகளை விஸ்தரிக்க முதலீட்டாளர்கள் தேவை. (CS 1246 A) 1-6

தொடர்பு: **070 700 3109**

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணம் முட்டாஸ் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள வீனஸ் எண்டப்பிறைசஸ் (Water Treatment Company) க்கு 18 - 30 வயதுக்குட்பட்ட பெண் வேலையாட்கள் தேவை. கணினி அறிவுடையவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**021 221 7744**

**துரித பொதிகள் சேவை**

உள்நாடு வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகை

Australia : 1850/=

France : 1400/=

Germany : 1250/=

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

திருமுருகன் கொம்பெனி

321, K.K.S. Road, யாழ்ப்பாணம்.

**0777 554528**

**ZOOM CLASSES (MATHS)**

Olympiad சிதம்பரா மற்றும் கணித போட்டி பரீட்சைக்கான வகுப்புக்கள் Zoom இனூடாக 10 வருடங்களிற்கு மேற்பட்ட அனுபவம் கொண்ட ஆசிரியரினால் கற்பிக்கப்படும்.

**Mr.S.Tharshan**

மேலதிக தகவல்களிற்கு:-077 454 0529

Grade 6 and 7
Tuesday 5-6 am
Thursday 5-6 am

Grade 8 and 9
Saturday 8.30-9.30 pm
Sunday 8.30-9.30 pm

**MTC Group and Personal Classes**

தமிழ், ஆங்கில மொழிமூல வகுப்புக்கள்

தரம் : 06 - O/L

தரம் : 06 மாணவர்களுக்கான

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

**ஆரம்பம்: 05.02.2022**

தொடர்பு: **077 290 6841, 077 045 9855** (CS 42492) (2.6)

பழனியாண்டவர் கோயிலடி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

நிர்வாகி
R.Mohan

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தியிலிருந்து புன்னாலைக் கட்டுவன் வீதியில் மெயின் றோட்டில் இரண்டாவது காணி கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 8 1/2 பரப்புக் காணி 2 பரப்பாகவும், 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 2.5 KM தூரம்)

**077 65 85 999**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், அச்சுவேலி பத்தைமேனி பகுதியில் 18 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. 1 பரப்பின் விலை - 3.5 லட்சம் (மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா). 15 அடி பாதையுடன் காபெட் றோட், நல்ல சூழல், நிலப்பரப்பு

(அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 2 KM தூரம்).

அச்சுவேலியிலிருந்து பலாலி செல்லும் வீதியில் தோலகட்டி கொம்பனிக்கு முன்வீதி.

தொடர்பு:-**076 890 9259, 077 015 0353**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A-9 பிரதான வீதியுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு) கைதடிப்பிள்ளையார் கோயிலில் இருந்து 500m தூரம்.

**பார்வையிடும் நேரம்:**

காலை 6.00 முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

(CS 42488) (2.6)

தொடர்பு: **077 814 7389, 077 614 7333**

**பணியாளர்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் தங்க ஆபரணங்கள் காட்சி அறைக்கு பின்வரும் பணியாளர்கள் உடன் தேவை.

- கணக்கு எழுதுனர் (ஆண் / பெண்)
- நகை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புவர்களும் (ஆண் / பெண்)

வெளிமாவட்ட ஆண் பணியாளர்களுக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும். சுயவிபரக்கோவையுடன் முற்பகல் 9.45 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை நேரில் வரவும்.

நியூ மைதிலி ஜுவலறிஸ்
இல. 38, 40
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (CR 37442) (3/6)

சந்தோஷ் ஜுவலர்ஸ்
இல. 97A, 99V
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

### கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியின் உயர் பிரிவுக்கான பயிற்சி நெறியின் இறுதிப் பரீட்சை கடந்த 24ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

வடக்கு மாகாணக் கூட்டுறவுத் திணைக்களத்தால் நடத்தப்படும் இந்தப் பரீட்சை எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறைவடையும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

**அகரம் உயர் நிலைக் கல்லூரி**

**AHARAM HIGH STANDARD COLLEGE**

காங்கேயன் துறைச்சாலை

மல்லாகம் | கொக்குவில்

புதிய கல்வியாண்டு - 2022 ஆரம்பம்

தரம் 06 - O/L

வரையான தமிழ் மொழி மூலம்

English medium வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

22.01.2022 இல் புலமைப்பரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய தரம் 06 தமிழ்மொழி மூல English medium வகுப்புக்கள் ஆரம்பம்

04.02.2022 [வெள்ளிக்கிழமை]

வளர்பிறை விநாயக சதுர்த்தி அன்று காலை 6.35 - 8.05 வரையான சித்தயோக நன்நாளன்று

அனுமதிகளை 26.01.2022 மாலை 02 மணியில் இருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
இயக்குநர்

(cs.1210)

# மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 08 . 1940



மறைவு
27 . 01 . 2022

## திரு.செல்லப்பா நடராசா

சின்னமன் கோவிலடி, தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் பெரியமாவடி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திரு.செல்லப்பா நடராசா நேற்று (27.01.2022) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா மற்றும் பிள்ளைச்சியாரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பையா மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்தின் பாசமிகு கணவரும், விமலராஜா (பிரான்ஸ்) பிறேமாவதி (பிரான்ஸ்) சறோஜினிதேவி, மண்டலேஸ்வரி, சிவதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மபிரியா (பிரான்ஸ்), தட்சணாமூர்த்தி (பிரான்ஸ்) வடிவழகன், இரவிச்சந்திரன், விஜயலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான அம்மாப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை, மற்றும் இலட்சுமிப்பிள்ளை, சரஸ்வதி, இராசம்மா ஆகியோரின் அன்புத் தமையனாரும், றபிஷன், வர்ஷினி, அனுஷியா, கிசோக், லுசான், பிரஜாகரன், தவதர்ஷன், தவதர்ஷிகா, மதுஷன், தனுஷிகா, ஷோபிதன், அபிஷன், அகஸ்தியா, கஜீவன், சுபித்ரா, ரதாசன், சனத் ஆகியோரின் அன்பு பேரனும், றெயான், கிலான், கவின், சகின் ஆகியோரின் அன்புப் பூட்டனாரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, துரைசிங்கம், மற்றும் தருமலிங்கம், தியாகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2022) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரியமாவடி வீதி,
சாவகச்சேரி.

தகவல் :
குடும்பத்தினர்.
077 666 9079

(CR 7176) 1-6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.